JESUS REDEEMS MINISTRIES

வாலிபர் உலகம்

மலர் : 10 | இதழ் : 9 | டிசம்பர் - 2019 | ஆண்டு சந்தா ₹ 100/-

நன்றி

நன்றியுள்ள இருதயத்தோடே

மகிமையையும் கனத்தையும் செலுத்தும்பொழுது கர்த்தர் மகிழ்வார்

வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

உள்ளே...

மெடிக்கல் மிராக்கள் 6

நன்றி உள்ளம் நிறைவுடன் 12

கிறிஸ்துமஸின் ஆசீர்வாதங்கள் 20

மன சோர்வு 26

நன்றி 30

Mo / Cheque / DD : "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும்.

வாலிபர் உலகம் பத்திரிகை சந்தா மற்றும் வாலிபர் ஊழியத்திற்கு நீங்கள் அனுப்பும் காணிக்கைகளை நாலுமாவடி முகவரிக்கு "வாலிபர் ஊழியம்" என்று குறிப்பிட்டு அனுப்பவும்.

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-220022.
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in

இப்பத்திரிகையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whatsapp மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்! 9750955547

ஆசிரியர்: மோகன் சி. லாசரஸ் | **இணை ஆசிரியர்:** அவினாஷ் | **ஆசிரியர் குழு:** ரெக்ஸ் கிளமெண்ட் | ஜிஷ்யா | லீனா அவினாஷ் ரெபேக்கா | ரேச்சல் | கிளாடிஸ் | ரவி | ஜாஸ்மின் | **வடிவமைப்பு:** ஜாஷ்வா

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

அது ஒரு காலைப் பொழுது, அந்த சிறுப் பையன் தன்னுடைய படிப்பிற்காக காலையில் சில பொருட்களை விற்று அந்த பணத்தைக் கொண்டு தனது பள்ளிக் கட்டணத்தைக் கட்ட நினைத்துக் கொண்டிருந்தான். காலையில் உணவு சாப்பிடாமல் வேலை செய்து களைத்துப் போனான். பசியின் கொடுமை அதிகமானதால், பக்கத்து வீட்டு நபரிடம் காலை உணவு கேட்க எண்ணி கதவை தட்டினான். ஒரு வாலிபப் பெண் கதவை திறக்க, உணவுக்கு பதிலாக தண்ணீர் கேட்டான்.

அந்த வாலிபப் பெண் அந்த சிறுவன் பசியால் இருப்பதை அறிந்துக் கொண்டாள். உள்ளே சென்று ஒரு டம்ளர் பால் கொண்டு வந்து கொடுத்தாள். பொறுமையாக அந்த பாலைக் குடித்துவிட்டு, நான் எவ்வளவு பணம் தர வேண்டும் என்றான். “நீ ஒன்றும் தர வேண்டாம்”, **“தயவு காட்டும் போது ஒரு போதும் பணம் பெறக் கூடாது”** என்று என் தாயார் சொல்லியிருக்கிறார்கள் என்றாள். அந்த சிறுவன் என் உளமார்ந்த நன்றி என்று சொல்லி புதிய பெலத்துடனும், புதிய நம்பிக்கையுடனும் தன் படிப்பை தொடர்ந்தான். அந்த வாலிபப் பெண் சில ஆண்டுகள் கழித்து ஒரு கொடிய நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். அவளுக்கு உதவி செய்ய தெரியாமல் திணறினார்கள். இறுதியில் ஒரு Specialist மருத்துவரை வரவழைத்து அவளுக்கு உதவ தீர்மானித்தார்கள். அந்த Specialist டாக்டர் அந்த வாலிபப் பெண்ணின் பெயர் மற்றும் ஊரைக் கேள்விப்பட்டவுடன் நேரில் வந்து அவளைப் பார்த்தார். இவள் தான் தனக்கு உதவி செய்த பெண் என்று கண்டுக் கொண்டார். முழு மூச்சுடன் சிகிச்சை செய்து அவளை காப்பாற்றினார். அந்த specialistன் அர்ப்பணிப்பைப்பார்த்து முழு டாக்டர் குழுவும் பாராட்டினார்கள். மகிழ்ச்சியோடு தன் அறைக்கு சென்று, cash counterக்கு போன் செய்து தன்னுடைய Consultation fees எவ்வளவு என்று கேட்டார். $28,350 என்று சொன்னார்கள், அந்த டாக்டர் அந்த Billன் மீது சில வரிகளை எழுதினார். அந்த Billயை எடுத்து சென்று சுகம் பெற்ற பெண்மணியிடம் கொடுத்தார் நர்ஸ்.

அந்த பெண்மணி ஏற்கெனவே Hospitalலுக்கு பணம் செலுத்த என்ன செய்வது என்று திகைத்துக் கொண்டிருந்தாள். இந்த புதிய ஆபரேஷனுக்கு specialist என்ன பில் Charge பண்ணாரோ என்று நடுக்கத்துடன் அந்த Billயை திறந்து பார்த்த போது அவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. “Paid in full with one glass of milk” Dr. Howard Kelly என்ற வரிகள் அவள் கண்களை கவர்ந்தது.

இன்றைக்குப் பல நன்மைகளை பெற்ற நாம் நன்றியுடன் உள்ளோமா? இந்த நாட்கள் நம் நன்றியினை வெளிப்படுத் துகிற நாட்களாய் மாறட்டும்! உங்களுக்கு தேவன் இரக்கமும் தயவும் பாராட்டினது போல், நீங்களும் இரக்கம் பாராட்டுவது உங்களின் கடமையாக உள்ளது.

அநேக நேரம் நமக்கு கிடைத்த நன்மையை நோக்கும் நாம், நன்மை செய்வதற்கு நன்றி சொல்ல மறக்கின்றோம்.

இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் உங்களின் நன்றியை தேவனுக்கும், தேவ பிள்ளைகளுக்கும் வெளிப்படுத்தி, அவரை மகிமைப்படுத்தி, பிறரை சந்தோஷப்படுத்துங்கள்! ●

கிறிஸ்துவின் பணியில்,
அவினாஷ்

எந்த அன்பு?

நான் 9ம் வகுப்பு படிக்கும் போது என் தோழி மூலமாக இயேசுவை ஏற்றுக்கொண்டேன். அவருடைய அன்பை ருசித்தேன். ஜெபம், வேதம் படிப்பது என 4 வருடங்கள் ஓடிவிட்டது. கல்லூரிக்கு சென்ற பின்பு என் தோழியோடு இணைந்து ஊழியம் செய்தேன். 3வது வருடம் படிக்கும் போது என்னுடன் படிக்கும் சிவாவை நேசிக்க ஆரம்பித்தேன். என் காதலன் என்னை திருமணம் செய்வேன் என்று சொல்கிறான். என் தோழி இவனை மறந்து விடு இது தவறான முடிவு என்று சொல்கிறாள். இந்த தவறான முடிவு உன்னை தடம் புரளச் செய்யும், ஆண்டவரை விட்டு தூரம் செல்ல வழி வகுக்கும் என்று சொல்கிறாள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒருபக்கம் இயேசு மறுபக்கம் நான் நேசிக்கும் நபர். என்ன முடிவெடிப்பது என்று தெரியவில்லை. ஆலோசனை சொல் லுங்களேன்

அனிதா, பெங்களூர்.

அன்பு சகோதரி அனிதா! முதலில் இயேசுவோடு அழகான உறவோடு, ஆவிக்குரிய வாழ்க்கையில் படியாக முன்னேறி, கல்லூரியில் ஊழியம் செய்து, பலருக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த உங்களை வாழ்த்துகிறேன்.

தற்சமயம் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட தடுமாற்றமும், சோர்வும் நன்கு புரிய முடிகிறது. அனிதா! உங்களின் தடுமாற்றம் வாலிபர்கள் மத்தியில் ஏற்படும் சகஜமான ஒன்று. இன்றைய சூழலில் ஒரு கல்லூரி மாணவிக்கு காதலன் இல்லை என்றால் அவளை கேலி செய்ய ஒரு கூட்டம் உண்டு. இப்படி மாணவர்கள் மத்தியில் அங்கீகாரம் பெறுவதற்காக தவறான தேர்ந்தெடுப்புகளை சிலர் தேர்வு செய்கிறார்கள்.

அனிதா! உங்களின் தீர்மானம் தான், இயேசுவோடு உங்களின் உறவு தொடரவோ அல்லது துண்டிக் கப்படவோ காரணமாக இருக்கும். உங்களால் இரண்டு எஜமானுக்கு ஊழியம் செய்ய முடியாது. சிவாவை நேசித்து திருமணத்தில் இணைய போகிறீர்களா? அல்லது இயேசுவோடு இணைந்து வாழ

விரும்புகிறீர்களா? மேலும் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக வாழும் போது ஆசீர்வாதமும், சந்தோஷமும் தொடர வாய்ப்பு இல்லை. அநேக நேரம் நாம் உலகத்தை ஏமாற்றிவிடலாம், ஆனால் இயேசுவை ஏமாற்ற முடியாது.

உங்களின் கடிதம் படிக்கும் போது வேதத்தில் உள்ள சம்பவம் ஞாபகம் வருகிறது. பாபிலோன் சாம்ராஜ்ஜியத்தில் நேபுகாத்நேச்சார் 60 அடி உயரமுள்ள பொற்சிலையை வணங்க வேண்டும் என்ற உத்தவு பிறப்பித்தார். ஒரு வேளை மீறினால் எரிகின்ற அக்கினிச் சூளையில் போடப்படுவார்கள். அக்கினி சூளையில் போட்டாலும் பரவாயில்லை, அந்த பொற்சிலையை வணங்கமாட்டோம் என்று அந்த மூன்று வாலிபர்களும் தீர்மானித்தார்கள். பாபிலோனில் எல்லாரும் வணங்குகிறார்கள், நாம் செய்யவில்லை என்றால் ஆபத்து வரும் என்று யோசிக்காமல், என்னுடைய ஒரு தவறான செயல் என் தேவனை துக்கப்படுத்தும் என்று எண்ணி அந்த பொற்சிலையை வணங்கவில்லை. அந்த மூன்று வாலிபர்களின் தீர்மானம், தேவனையே சிங்கானத்தை விட்டு இறங்கி அந்த அக்கினி நடுவே வரவழைத்தது.

உங்களை குறித்து தேவன் வைத்திருக்கும் திட்டத்தில், தொடர்ந்து ஓடி ஒரு வெற்றியுள்ள மகளாகத் திகழலாம்.

இன்றைக்கு நம்முடைய சுய நலத்திற்காக இயேசுவையும், அவருடைய அன்பையும் தூக்கி எறிய முற்படுகிற ஒரு கூட்டம் எழும்பிவிட்டது. அநேக நேரம் இயேசுவை நேசிக்கிறேன் என்று சொல்லும் நாம் நம்முடைய செயல் தேவனை சந்தோஷப்படுத்துகிறதா? இல்லை துக்கப்படுத்துகிறதா? என்று யோசிப்பதில்லை. அனிதா! இன்றைக்கு நீங்கள் எடுக்கும் தீர்மானம், இயேசுவோடு உங்கள் உறவு தொடருமா அல்லது துண்டிக்கப்படுமா என்பதை உறுதி செய்யும்.

ஒரு வேளை உங்கள் காதல் தொடர்ந்தால் என்ன நேரிடும்...

- முதலில் உங்கள் படிப்பு பாதிக்கும் (3rd Year Discontinue)
- பெற்றோரின் எதிர்ப்பை சம்பாதிக்கலாம்.
- நீங்கள் செய்த எல்லா ஊழியமும் ஒரு முடிவுக்கு வர வாய்ப்பு உண்டு.
- சமுதாயத்திற்கு நீங்கள் ஒரு தவறான எடுத்துக் காட்டாக மாற வாய்ப்பு உண்டு.
- தேவன் உங்கள் மேல் வைத்துள்ள பெரிய திட்டம் நிறைவேறாமல் போக வாய்ப்பு உண்டு.
- ஒரு வேளை நீங்கள் நேசித்த சிவாவே உங்களை வெறுக்கவோ அல்லது உறவை பாதியில் துண்டிக்கவோ வாய்ப்பு உண்டு.
- உங்களின் தீர்மானம் தவறான தென்று உணர்ந்து நீங்கள் மனம் உடைந்து போகவும் வாய்ப்பு உண்டு.
- படிக்கின்ற இந்த வயதில் வாழ்க்கைத் துணை முடிவு செய்யும் செயல் தவறானதாக இருக்க வாய்ப்பு உண்டு.

ஒரு வேளை இந்த காதல் என்னும் உறவு வேண்டாம் என்று தீர்மானித்தால் என்ன நடக்கும்...

- சில மாதம் வேதனையும், வலியும் உங்களுக்கு ஏற்படலாம்.
- நேசித்த நபரை இழந்த வருத்தம் சில நாள் தொடரலாம்.
- ஆனால் உங்கள் படிப்பை சீராக படித்து முடித்து, மேல் படிப்பை தொடரலாம்.
- உங்கள் பெற்றோரின் விருப்பப்படி ஒரு நல்ல திருமண வாழ்க்கை அமையலாம்.
- உங்களை குறித்து தேவன் வைத்திருக்கும் திட்டத்தில், தொடர்ந்து ஓடி ஒரு வெற்றியுள்ள மகளாகத் திகழலாம்.
- அநேக பெண்களுக்கு உங்கள் வாழ்க்கை ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாக அமையலாம்.

எனவே அனிதா இத்தனை காரியங்களையும் மனதில் வைத்து தீர்மானம் செய்வது நல்லது. ஒரு வேளை இயேசு மறுபடியும் என்னை ஏற்றுக்கொள்வாரா? அவரை விட்டு தூரம் சென்ற என்னை மன்னிப்பாரா? என்ற எண்ணம் உங்களுக்கு வரலாம். இயேசு தன்னிடம் வந்தவர்களை ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லை.

எனவே ஜெபித்து தீர்மானம் செய்யுங்கள். அனிதா! ஒருவர் வாழ்க்கையில் எடுக்கும் ஒரு முக்கியமான தீர்மானம் அவர்களின் வாழ்க்கை துணை. எனவே உணர்ச்சிவசப்பட்டு தீர்மானம் எடுக்க கூடாது. தவறான தீர்மானம் துயரத்தில் தான் முடியும். தெளிவான தீர்மானம் செம்மையான வாழ்வை தரும்! All the Best! ●

மெடிக்கல் மிராக்கள்

MEDICAL MIRACLE

ஒவ்வொரு மாதமும் பல உயிருள்ள, ஸ்வாரஸ்யமான சாட்சிகளை பேட்டிக் கண்டு, அதனை உங்களுக்காக தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தேன். அந்த சாட்சிகள் உங்களில் அனேகருக்கு பிரயோஜனமாய் இருந்தது, உங்களை உற்சாகப்படுத்தியது என்பதை அறிந்து தேவனுக்கு மகிமை செலுத்துகிறேன். இந்த மாதம் சற்று வித்தியாசமாக என் வாழ்க்கை பயணத்தை உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்...

ஹம்... நான் பிறந்து, வளர்ந்தது எல்லாமே நல்ல ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் தான். நல்ல ஜெபிக்கும் பெற்றோர்களை தேவன் எனக்குக் கொடுத்தார். என் பெற்றோருக்கு

நான் ஒரே பிள்ளை. சந்தோஷமாக, பாசம் நிறைந்த குடும்பத்தில் தேவனுக்கு பயப்படும் பயத்தில் வளர்க்கப்பட்டேன். படிப்பிலும் எப்படியாவது முதல் 3 Rankகுள் எடுத்துவிடுவேன். பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, Painting, Hand Writing போட்டிகளில் எல்லாம் கலந்துக் கொண்டு பல பரிசுகளும் பெற்றிருக்கிறேன்.

இப்படிப் படிப்பிலும் சுட்டியாய், இதரப் போட்டிகளிலும் சூப்பராக பரிசுகளைப் பெற்று, சந்தோஷமான குடும்பத்தில் வாழ்ந்துக் கொண்டிருந்த என் வாழ்வில், 2004ம் ஆண்டு மே மாதம் ஒரு புயல் வீசத் துவங்கியது. அதாவது திடீரென நான் பெலவீனப்பட்டேன்.

மருத்துவர்களிடம் சென்ற போது, பல பரிசோதனைகளுக்கு பின், நரம்பியல் சார்ந்த ஒரு பிரச்சனை மூளையில் இருப்பதால், எந்த விதத்தி லும் அதனைப் பாதிக்கக்கூடிய செயல்களில் ஈடுபடக்கூடாது என்று கண்டிப்பாக சொல் லிவிட்டார்கள். **அதாவது ரொம்ப படிக்கக் கூடாது, பயணம்** (Travel) **செய்யக் கூடாது,** Strain **பண்ணி பண்ணி எந்தச் செயல்களையும் செய்யக் கூடாது...** இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். பல மாத்திரைகள் எடுக்க வேண்டும், இவைகளில்,

தூக்கத்தை தூண்டக்கூடிய மாத்திரைகளும் இருந்தது. எனவே பள்ளிக்குச் சென்றாலும், படிக்க முயற்சித்தாலும் தூக்கம் வரும்.

9ம் வகுப்பு வரை நன்றாக படித்துக் கொண்டிருந்த **என் வாழ்வில் ஏன் இப்படி ஒரு சோதனை?** என்று யோசித்ததுண்டு. 10ம் வகுப்பு பொது தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்தன, எப்படி சமாளிக்க போகிறோம்? என்று யோசித்தேன். 2005ம் ஆண்டு ஜனவரி மாதத்தில், வேதத்தில் உள்ள 5 அப்பம் 2 மீன்களின் மூலம் (யோவான் 6:1-14) தேவன் என்னோடு பேசினார். அதாவது, 5×1000=5000 தேவனால் எந்த சிறிய காரியத்தையும் 1000 மடங்கு

பெருகச் செய்ய முடியும் என்பதை வெளிப்படுத்தினார். எனவே எனக்கு ஞாபக சக்தியையும் 1000 மடங்கு பெருக செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு ஜெபித்து மாத்திரைகளும் எடுத்துக்கொண்டு 2 மாதங்கள் படித்தேன். என் பக்கத்தில் ஒரு நாற்காலி போட்டுக் கொண்டு, இயேசு என்னோடு கூட அமர்ந்து சொல்லி தரும்படி ஜெபித்து விட்டு படித்தேன்.

பரீட்சையும் எழுதினேன். எப்படியோ தேர்ச்சிப் பெற்றால் போதும் என்ற நிலையில் தான் முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் **தேவன் மேல் நான் வைத்த நம்பிக்கையை அவர் கனம் செய்தார்.** யாரும் சற்றும் எதிர்பாராத விதத்தில் 2005ம்

என் பக்கத்தில் ஒரு நாற்காலி போட்டுக் கொண்டு, இயேசு என்னோடு கூட அமர்ந்து சொல்லி தரும்படி ஜெபித்து விட்டு படித்தேன்.

ஆண்டு பொதுத் தேர்வில், பள்ளியில் முதலிடம் பெற (School Topper) தேவன் உதவினார். இப்படியாக 12ம் வகுப்புப் பொதுத் தேர்விலும் நல்ல மதிப்பெண்கள் பெற உதவினார். பொறியியல் பட்டப்படிப்பை (B.Tech) முடிக்கவும், MBA மேற்படிப்பை முடிக்கவும் தேவன் பெரிதும் உதவினார். **மருந்து மாத்திரைகளின் மத்தியிலும் படிப்பிலும் இதர துறையிலும் பல பதக்கங்களையும் பெற உதவினார்.**

இப்படியாக என்னுடைய உயர் கல்வியைப் படிக்கும் போதே எனக்கு வேலை கிடைத்தது. ஆனால் **என்னுடைய கனவு பச்சை நிற பேனாவில் கையெழுத்துப் போட வேண்டும் என்பதே.** Ph.D. (முனைவர்) படிப்பு 5 ஆண்டுகள் படித்தால், பச்சை நிற பேனாவில் கையெழுத்துப் போடலாம் என்பதை தெரிந்துக் கொண்டு அதற்கான முயற்சிகள் எடுத்து, விண்ணப்பித்தேன். ஓர் ஆண்டின் ஆய்வுகளை, பல பேராசிரியர்கள் முன் சமர்பிக்க வேண்டும். எனவே அதற்காக என்னை தயார்ப்படுத்திக் கொண்டிருந்தேன். இந்நிலையில் 2015ம் ஆண்டு, பாவூர் சத்திரத்தில் இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் சார்பில் வாலிபர் கொண்டாட்டம் கூடுகையில் சாட்சி சொல்லவும், ஊழியம் செய்யவும் என்னை அழைத்தார்கள்.

ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளி வரை அலுவலகத்தில் வேலை செய்வேன் சனி, ஞாயிறு நாட்களில் இயேசு விடுவிக்கிறார்

வாலிபப் பிரிவினரோடும் மற்ற ஊழியங்களோடும் சேர்ந்து ஊழியம் செய்வேன். அந்த வாரம் அவ்வூழியத்திற்கு சென்ற போது, 2015 July 4th காலை திருநெல்வேலி ரயில் நிலையத்திலிருந்து பாவூர் சத்திரம் நோக்கி காரியில் சென்றுக் கொண்டிருந்த போது, எதிர்ப்பாராத விதமாக எதிரே வந்த கார் எங்கள் வண்டியின் மீது மோதி, அதில்

சென்ற எங்களுக்கு பயங்கர மான விபத்து ஏற்பட்டது. எனக்கு தலையில் அடிப்பட்டது, மூளைக்கு வெளியே இரத்தம் கட்டியிருப்பதாக மருத்துவர்கள் சொன்னார்கள். அற்புதமாக உயிர் பிழைத்தேன் என்றார்கள். **மறுபடியும் நம் கனவை அடைய விடாமல், தடை ஏற்படுகிறதே என்று குழம்பினேன்.** மறுபடியும் மூளையா? என்று பயந்தேன். ஆனால் எவ்வித பெரிய பிரச்சனையும் இன்றி சில நாட்களில் Discharge ஆகவும், குறித்தபடி Ph.D. (முதல் VIVA)வில் கலந்துக் கொண்டு தேர்ச்சிப் பெறவும் தேவன் உதவினார். புயல் அடித்தது, கப்பல் கவிழ்ந்து விடுமோ என்று பயந்தேன். ஆனால் வாக்குப்பண்ணினவர் நடத்தினார். இன்னும் சில மாதங்களில் என்னுடைய படிப்பை முடித்து பச்சை நிற பேனாவில் Sign போடவும் உதவுவார்.

இப்படி கனவு, இலட்சியம் ஒரு புறம் இருக்க, மற்றொரு புறம் நம்பிக்கையற்ற என் வாழ்வில் வசனத்தின் மூலம் தேவன் எனக்கு நம்பிக்கை கொடுத்தாரே! எவ்வளவோ மாணவர்கள் நம்பிக்கையற்ற நிலையில், எதிர்காலத்தைப் பற்றி திட்டமே இல் லாமல் வாழ்கிறார்களே! அவர்கள் வாழ்விலும் நம்பிக்கையை அளிக்க வேண்டும் என்று தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களை சந்தித்து, அவர்களாலும் சாதிக்க முடியும் என்று உற்சாகப்படுத்தக்கூடிய வார்த்தைகளை Motivational Talkகளின் மூலமும் என் வாழ்க்கை சாட்சியின் மூலமும் வாலிபர்களின் வாழ்வில் உயர்ந்த இலட்சியத்தை அடைய தேவன் என்னை பயன்படுத்தி வருகிறார். அதற்காக நான் அவரை துதிக்கிறேன்.

எனக்கு ஜீவனைக் கொடுத்து, முடியாது என்று மருத்துவ உலகம் சொன்னதை முடித்து காண்பிக்க உதவிய தேவனைப் பற்றி அநேக வாலிபர்களுக்கு சொல்ல தேவன் உதவுகிறார்.

இப்படி பள்ளி, கல்லூரி மாணவர்களை உற்சாகப் படுத்துவதோடு நிறுத்தாமல், திக்கற்ற, ஆதரவற்ற, சமுதாயத்தால் தள்ளப்பட்ட நிலையில், உள்ள

இளம் வாலிப பெண்களின் வாழ்விலும், அவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று யோசித்தேன். என் தோழிகள் சிலரோடு பகிர்ந்துக்கொண்டேன். **'எனக்கு தெரிந்தவைகளை, தெரியாதவர்களுக்கு சொல் லிக்கொடுப்போமே!'** என்று ஒவ்வொருவரும் யோசித்தோம். நடனம், கர்நாடக சங்கீதம், பாடல், பேச்சுப்போட்டி, கவிதை எழுதுவது, Art and Craft (கைவினைப் பொருட்கள்), Painting இப்படி ஒவ்வொரு கைவிடப்பட்ட நிலையில்

உள்ள மாணவியின் தாலந்தையும் அடையாளம் கண்டுக்கொண்டு, 2019ம் ஆண்டு Julyயில் இருந்து அவர்களுக்கு அதனை சொல்லிக் கொடுக்க துவங்கினோம். மூன்று நபர்களாக, அதாவது நான் என்னுடைய 2 தோழிகள் என்று ஆரம்பித்தது, சில மாதங்களிலேயே 12 Volunteers சேர்ந்தார்கள். I.T. துறை, மருத்துவம், கல்வி, இப்படி 25-35 வயதில் உள்ள பெண்கள், அவர்கள் நேரத்தை, தாலந்தை இம்மாணவர்களுக்காக செலவிடு கிறார்கள். ஒவ்வொரு வாரமும் அரசாங்க பெண்கள் விடுதியில் (Juvenile Home) இதனை செய்து வருகிறோம். 'எனக்கு யாருமில்லை', 'நான் எதற்குமே உபயோகமற்றவள்', 'என்னை பலரும் தவறாக நடத்தி விட்டார்கள்', 'எனக்கு எதிர்காலமே இல்லை', என்று நம்பிக்கையற்ற நிலையில் உள்ள 60ற்கும் மேற்பட்ட மாணவிகளை, சமூதாயத் தில் உன்னால் தலை நிமிர்ந்து வாழ முடியும், சாதிக்க முடியும் என்று அவர்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம், அவர்களுக்கும் Motivational Talk's கொடுத்து வருகிறேன்.

இதுத் தவிர, நம்பிக்கையற்ற நிலையில் உள்ளவர்களை உற்சாகப்பத்தக்கூடிய (Motivational) வீடியோக்களை You Tube போன்ற சமூக வலைத்தளங்களிலும் தொகுத்து வழங்கி வருகிறேன். தேவன் எனக்கு கொடுத்த தாலந்துகளை அவர் நாமம் ம கிமைக்காக எல்லா விதங்களிலும் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணி, 2011ம் முதல்இயேசு விடுவிக்கிறார் வாலிபர் உலகம் பத்திரிக்கையில் எழுதுவது, மொழி பெயர்ப்பது, என்று என்னால் முடிந்தவைகளை செய்து வருகிறேன்.

சில மாவட்டங்களில் நடக்கும் Synergia கூடுகைகளுக்கு என்னால் முடிந்த வரை செய்து வருகிறேன். Painting என்னுடைய பொழுதுபோக்கு, இதன் மூலமாக தேவனை மகிமைப்படுத்தி வருகிறேன். தொலைக்காட்சியிலும், கிறிஸ்தவ நிகழ்ச்சிகளை தொகுத்து வழங் குகிறேன். எல்லாவற்றிலும் ம ற்றவர் களை உற்சாகப்படுத்தக்கூடிய வார்த்தைகளையே பேசுகிறேன். இவற்றையெல்லாம் என்னை பெருமைப்படுத்தவோ,

மேன்மைப்படுத்தவோ சொல் லவில்லை; ஆனால் பயணம் செய்யக்கூடாது, படிக்கக்கூடாது, Strain பண்ணக்கூடாது இப்படி மருத்துவர்களின் வார்த்தைக்கு அப்பாற்பட்டு, அவற்றையெல்லாம் செய்ய தேவன் என்னை பெலப்படுத்தி வருகிறார். ஆம்! தேவன் நான் கேட்ட சுகத்தை பரிபூரணமாய் இன்னும் தரவில்லை; பல நேரங்களில் வலிகளும், வேதனைகளும் இருக்கிறது. **பெலவீனங்கள் இருக்கிறது; சில ஜெபங்களுக்கு தேவன் இன்னும் பதில் தரவில்லை;** இவற்றையெல்லாம் சாக்குப் போக்காக சொல்லி, தேவனை விட்டு விலகி, ஊழியம் செய்யாமல் இருக்கலாம்; ஆனால் நான் இன்று உயிரோடு இருக்கிறேன் என்றால் அதற்கு ஒரு நோக்கம் (Purpose) இருக்கிறது. அதனை அறிந்து, வாழும் இந்த ஒரு வாழ்க்கையை, நம்பிக்கையற்ற நிலையில் வாழும் அநேகருக்கு நம்பிக்கை நட்சத்திர மாகிய இயேசுவை அறிமுகம் செய்ய விரும்புகிறேன்.

இதை வாசிக்கும் வாலிபர்களே! இவ்வுலகத்தில் போராட்டங்கள், வலிகள், ஏமாற்றங்கள், பெல வீனங்கள் உண்டு. ஆனால் திடன் கொள்ளுங்கள்; இயேசு வோடு இணைந்து உங்களால் ஜெயிக்க முடியும்..!

தொடர்ந்து ஓடுவேன்..!
என் இயேசுவிற்காய் ஓடிடுவேன்.

பாருங்கள் வாலிபர்களே! டாக்டர் சாத்தியமில்லை என்று சொன்னாலும் பரம வைத்தி யராம் இயேசுவால் முடியும் என்பதற்கு சகோதரி ஜிஷ்யாவின் சாட்சி உங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. தேவனுக்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று முழுமனதோடு நீங்கள் முயற்சி எடுத்தால், தேவன் அந்த முயற்சியை முடித்து காட்டுவார்! அது தான் நம் தேவன்! ●

யோசேப்பு

இவன் ஒரு ஏழை வாலிபன். தாவீதின் வம்சத்தான். நாசரேத்தூரான், நீதிமான், தச்சுத்தொழில் செய்தவன், கர்த்தரின் நியாயப்பிரமாண விதி களை கருத்தாய் கடைபிடித்தவன். பிறரை அவமானப்படுத்தும் நோக்கமில் லாதவன். சிந்தித்து செயல்பட்டவன். சொப்பனத்தில் கூறப்பட்ட தேவ வார்த்தையையும் சந்தேகப்படாமல் நம்பி விசுவாசித்து கீழ்ப்படிந்தவன். தேவ சித்தத்தின்படி கிறிஸ்து வெளிப்பட தன் சுயத்தை விட்டுக் கொடுத்து மரியாளுக்கு உற்ற துணையாக நின்று உதவிய உத்தம புருஷனாக திகழ்ந்தார். எனவே நாமும் நம் வாழ்வில் தேவ திட்டம் நிறைவேற நம் சுயத்தை விட்டால் உயர்ந்த நிலையை அடையலாம்.

கதை

ரெபேக்கா

கிறிஸ்துமஸ் பரிசு

கிறிஸ்துமஸ் ஆராதனைக்காக ஆலயத்தில் முதல் மணியோசை அந்தப் பனிப்பொழிவைக் கிழித்துக் கொண்டு அந்தப் பகுதி முழுவதும் கணீர் என எதிரொலிக்க, கிறிஸ்துமஸ் ஆராதனையில் கலந்துகொள்ள சோபியா, ராபர்ட் தம்பதியினர் தன் மகள் ஜெனியுடன் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஜெனி இன்றைக்கு குளிர் மிக அதிகமாக இருக்கிறது. ஆகையால் ஸ்வெட்டரை போட்டுக் கொள் என தன் மகளிடம் கொடுத்தாள் தாய் சோபியா.

ஜெனி வேண்டாம் அம்மா, ஸ்வெட்டர் போட்டால் கிறிஸ்துமஸ் டிரஸ் தெரியாது என்றாள்.

சரி உன் விருப்பம் என்று சொல்லி தன் கணவரோடு ஜெனியையும் அழைத்துக் கொண்டு ஆலயத்துக்குப் புறப்பட்டனர்.

சீரியல் பல்புகளாலும், அலங்கார விளக்குகளாலும் ஆலயம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாடல் குழுவினர் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தனர்.

பயங்கரமான குளிர் வாட்டுதே! அம்மா சொன்னபடி ஸ்வெட்டர் அணிந்து வந்திருக்காலாமோ என ஜெனி எண்ணினாள்.

பசிக்குது எதாவது கொடுங்கள் என சத்தமிட்டவாறே ஆலய வளாகத்தின் இரு புறங்களிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது. கிறிஸ்துமஸ் தினமாதலால் எப்போதும் இருப்பதைவிட அதிக மான நபர் வந்திருந்தார்கள். அந்த கூட்டத்தில் இருந்த ஒரு பெரியவர், “அம்மா... தாயே, இந்தக் கண் தெரியாதவனைஆலயத்தின் வளாகத்திற்குள் கொண்டு போய் விடுங்கம்மா... இங்கே இருக்கிற கூட்டத்தில் என்னால் பிச்சை எடுக்க முடியாதும்மா... குளிரும் வாட்டுதும்மா... இரக்கம் காட்டுங்கம்மா...” என குரல் கொடுக்க, பக்கத்தில் இருந்த ஒரு பெரியவர்; உன் இரண்டு கண்ணும் தெரியல. கைகள் இரண்டும்

புண்களாக இருக்க உன்னை யாரு கூட்டி போய் விடுவார்கள்? பேசாமல் எங்களைப் போன்று இங்கேயே உட்கார்ந்து, கிடைக்கிறதை வாங்கிக்கொள் என்று அதட்டினார். இந்த அபயக் குரலை ஜெனியின் காதுகளில் விழுந்தது.

உடனே ஜெனி, அப்பா அந்தப் பெரியவரைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. உதவி செய்வோமா என்றாள்.

ஜெனி அவர் கைகளைப் பார்த்தாயா? ஒரே தொழுநோய்... பார்த்தாலே அருவருப்பாய் இருக்கிறது என்றார் ஜெனியின் அப்பாவும் அம்மாவும்.

ஜெனிக்கு அந்தப் பெரியவருக்கு உதவ முடியவில்லையே என்ற கவலையோடு ஆலயத்திற்குள் சென்றாள். ஆனால் அவளுக்கு அந்த பெரியவரின் குரல் திரும்ப திரும்பக் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. இரண்டாம் மணி அடித்து முடித்ததும் ஆரம்ப ஜெபத்தோடு ஆராதனை ஆரம்பித்தது. இப்போது என்னை என் பெற்றோரால் தடுக்க முடியாது என எழுந்து ஆலயத்திற்கு வெளியே ஓடி வந்து, தாத்தா நான் உங்களை ஆலய வளாகத்திற்குள் அழைத்து செல்கிறேன் என அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றாள். ஜெனிக்கு மனநிறை வாகவும், மகிழ்சியாகவும் இருந்தது.

ஆராதனை முடித்து பிரசங்கத்தை போதகர் ஆரம்பிப்பதற்கு முன்பாக, மூப்பர் ஒரு துண்டு சீட்டைப் போதகரிடம் கொடுத்தார். அதை பிரித்து படித்தப் பின் தன் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள் என சொல்லி ஆரம்பித்தார். இயேசு அனைவருக்கும் இதயத்தைப் படைத்துள்ளார், அதில் துடிப்பை மட்டுமல்ல, கருணையையும் வைத்துள்ளார். அந்தக் கருணையை உரியவருக்கு உரிய நேரத்தில் நாம் காட்டுகிறோமா? அப்படிசெய்பவர்கள்தான் உண் மையான இதயம் படைத்தவர்கள் என்று சொல்லி, அன்னை தெரேசா ஏழைப் பிள்ளைகள் மீதும், பிணியாளிகள் மீதும், குஷ்டரோகிகள் மீதும் கருணைக் காட்டினார். அதனால் தான் அவர் புகழ் உலகமெங்கும் பரவியது என்று சொன்னார். கிறிஸ்துமஸ் தினத்தன்று

சஸ்பென்ஸாக ஒரு போட்டி வைக்கப்படும், அந்த போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தங்க நாணயம் பரிசாக வழங்கப்படும் என்று அறிவித்திருந்தோம்.

நீங்கள் அனைவரும் ஆலயத்திற்கு வரும் வழியில், கண் தெரியாமல், குஷ்டரோகத்தோடு ஒருவர் என்னை ஆலய வளாகத்திற்குள் கொண்டு விடுங்கள் என்று சொன்னார் அல்லவா? அந்தப் பெரியவர் இப்போது மேடைக்கு வருவார் என போதகர் அறிவிக்க, மேடையில் வந்து தனது ஒப்பனையை கலைத்தார். சபை மக்களின் கரகோஷம் ஆலயம் எங்கும் எதிரொலித்தது. அவர் வேறு யாருமல்ல, சபையின் உதவிப் போதகர் சைமன் தான் அப்படி வேஷம் போட்டு நின்றிருந்தார்.

நம் மகள் இந்தப் பெரியவருக் குத்தானே உதவ வேண்டும் என்றாள், நாம் அவளை உதவ விடாமல் தடுத்து விட்டோமே, நம் மகளின் எண்ணப்படி உதவி செய்திருந்தால் தங்க நாணையம் கிடைத்திருக்குமே என ஜெனியின் பெற்றோர் நினைத்துக் கொண்டிருக்க, இப்போட்டியில் ஒரு சிறுமி மட்டும் வெற்றி பெற்றிருக் கிறாள், அந்த சிறுமி ராபர்ட் சோபியா தம்பதியனரின் ஒரே மகள் ஜெனி என போதகர் அறிவிக்க, சபை மக்களின் கைதட்டலோடு மேடை ஏறி தங்க நாணயத்தை பரிசாக வாங்கினாள்.

போதகர் மற்றும் அனைவரும் அவளை ஆசீர்வதித்து அனுப் பினார்கள். இதுதான் ஜெனிக்கு கிடைத்த கிறிஸ்துமஸ் பரிசு. நாமும் கருணை உள்ளத் தோடு வாழ வேண்டும் என்று இந்த சிறுமி ஜெனியின் மூலமாக கற்றுக்கொண்டு ஒரு தீர்மானம் எடுக்க முடிந்தது.

வாலிபர்களே! ஒரு சிறு பெண்ணின் இரக்க குணத்தினால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டாள். இது உலகப்பிரகாரமாக பெற்றுக் கொண்டாலும், ஆண்டவரும் இரக்க குணமுடையவர்களை அதிகமாக நேசிக்கிறார். எனவே இந்த சிறுபெண் ஜெனியைப் போல இரக்க குணமுடையவர்களாக வாழ கற்றுக்கொள்ளுங்கள்! ●

ரெக்ஸ் கிளமென்ட்

நன்றி உள்ளம் நிறைவுடன்

நன்றி! என்கிற வார்த்தை ஓர் பிரசித்தி பெற்ற ஒரு வார்த்தை. நமது அன்றாட வாழ்வில் பயன்படுத்துகின்ற ஓர் அற்புதமான வார்த்தை என்று சொல்லலாம்.

நாம் அன்றாடம் சந்திக்கும் நபர்களிடம், மேல் அதிகாரிகளிடம், ஏன் ஹோட்டலில் பரிமாறும் நபர்களிடமும், நன்றி என்கிற வார்த்தையை நாம் அறியாமலே கூறுகின்றோம். ஆனால் நம்மை படைத்த, சர்வ சிருஷ்டிகருக்கு நாம் மனதார நன்றி செலுத்துகின்றோமா? என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டிய தருணம் இது.

சென்னை, அண்ணா நகரில் போக்குவரத்து நெருக்கமான சிக்னல் நிறுத்தத்தினால் காரை நிறுத்தி இருந்தேன். அப்பொழுது வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் என் கார் ஜன்னலை தட்டி, சில Nursery Rhymes புத்தகங்களை வாங்கும்படி கெஞ்சினார். அந்த Nursery புத்தகங்கள் எனக்கு தேவைப்படாததால், வேண்டாம் என்பதை போல செய்கைக் காட்டி அவரை அனுப்பிவிட்டேன். பின் அந்த முதியவர் ஒவ்வொரு காரின் ஜன்னல் கண்ணாடியை தட்டி தட்டி புத்தகங்களை வாங்கும்படி கெஞ்சிக் கொண்டிருந்தார். அவரை உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருந்த எனக்குள் தேவ ஆவியானவர் பேச ஆரம்பித்தார். அந்த முதியவருக்கு உதவி செய் என்று பாரப்படுத்தினார். நான் என் காரின் ஜன்னலை திறந்து, அந்த முதியவரை அழைத்தேன். ஒவ்வொரு புத்தகத்திலும் ஒன்றை கேட்டு, எவ்வளவு? என்றேன். அவர் ஒரு சிறிய தொகையைத் தான் சொன்னார்.

நான் என் கையில் இருந்த பெரிய தொகையை அவர் கையில் கொடுத்து விட்டு சில்லரை வேண்டாம் என்று சொல்லி அனுப்பிவிட்டேன். தன் கையில் பொதிந்திருந்த அந்த ரூபாய் நோட்டை மெல்ல பார்த்த அந்த முதியவர் என்னிடம் ஓடி வந்தார். சார் சார்! இவ்வளவு தொகை ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்டார். அது உங்களுக்கு தான் என்றேன். சார் ரொம்ப நன்றி சார் இன்றைக்கு எங்க குடும்பம் நல்ல உணவை சமைத்து சாப்பிடுவோம் என்று உற்சாகமாக துள்ளி குதித்து தன் வீட்டை நோக்கி ஓடுவதைப் பார்த்தேன். பச்சை நிற சிக்னல் மின்னிட உள்ளம் நிறைவுடன் காரை நகர்த்தினேன்.

ஒரு சாதாரண மனிதன் சொல்லும் **"நன்றி"** என்கிற வார்த்தை நமக்கு சந்தோஷத்தை ஏற்படுத்துமானால், நம் நினைவாகவே இருந்து, நமக்கு ஆசீர்வாதங்களை அள்ளித் தரும் ஆண்டவருக்கு நாம் எவ்வளவு நன்றி உள்ளவர்களாய் வாழ வேண்டும்? உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆண்டவருக்கு எவ்வாறு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும் என்பதை ஆராய்ந்து பார்ப்போம். சங்கீதம் 100ஆம் அதிகாரத்தை கவனமாய் வாசித்துப் பாருங்கள், தாவீது ராஜா உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு கெம்பீரமாய், கர்த்தரை துதித்து,

அவருடைய நாமத்தை ஸ்தோத்திரிப்பதை நாம் காணலாம். வருடத்தின் கடைசி நாட்களில் பயணிக்கும் நாம், இந்த வருடம் முழுவதும் நமக்கு உதவி செய்து, நம்மை பராமரித்த ஆண்டவருக்கு நாம் நெஞ்சார நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கின்றோம்.

லூக்கா17ஆம்அதிகாரத்தில்குஷ்டரோக நோயில் இருந்து பூரண சுகம் அடைந்த 10 தொழு நோயாளிகளை குறித்து நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். சுகம் பெற்றதில் ஒருவன் மட்டும் ஓடி வந்து இயேசுவுக்கு நன்றி சொன்னான். அவன் ஒரு சமாரியன், ஓர் அன்னியன் என்று கருதப்பட்டவன். ஆனால் சுகம் பெற்றதை அறிந்து, ஆசாரியருக்கு தன்னை வெளிப்படுத்தாமல், தனக்கு அற்புத சுகமளித்த இறைவனுக்கு நன்றி செலுத்த ஓடி வந்தான். இயேசு அவனைப் பார்த்து மற்ற ஒன்பது பேர் எங்கே? என்று கேட்டார். அந்த ஒன்பது பேரில் நீங்களும் ஒருவரா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

அமெரிக்கா மற்றும் கனடா தேசங்களில் நவம்பர் கடைசி வாரம் "நன்றி செலுத்தும் வாரமாக" அனுசரிக்கப்படுகின்றது 1863ஆம் வருடம் முதல் அன்றைய ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் நவம்பர் 26ஆம் தேதியை "Thanks giving day" என அறிவித்து, இன்று வரை அமெரிக்கர்கள் இந்த தினத்தை சிறப்பாக கடைபிடித்து வருகின்றனர். தேவாலயங்களில் சிறப்பு நன்றி படைத்தல் வைபவங்கள் அமெரிக்கா தேசமெங்கும் நடைபெறுகின்றது.

அன்பு நண்பர்களே! நாம் நேரம் எடுத்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் பொழுது கர்த்தரின் உள்ளம் குளிர்கின்றது. நம்மை உண்டாக்கினதற்காக அவர் சந்தோஷப்படுவார்.

நாம் எதற்காக நன்றி கூற வேண்டும்?

கர்த்தருடைய கிருபைக்காக

"நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்" (புலம்பல் 3:22,23). நாம் இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு நிமிடமும், நாளிகையும் அவருடைய கிருபையால் தான் வாழ்கின்றோம் என்பதை நினைத்து நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும். இந்த வருடம் முழுவதும் 11 மாதங்கள், கர்த்தர் நம்மை நடத்தின விதத்தை நினைத்துப் பாருங்கள். அவைகள் ஆச்சரியமாய் இருக்கும். குறிப்பிட்ட ஒரு பிரச்சனையில் இருந்து எப்படி தப்புவது என்று நாம் திகைத்த பொழுதெல்லாம், ஆண்டவர் எவ்வளவு அழகாய் நம்மை தப்புவித்தார் என்பதை நினைத்து, நமது அன்றாட ஜீவியத்திற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்.

கர்த்தருடைய இரட்சிப்பிற்காக...

"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழும்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபேசியர் 2:7,8.)

அனேக நேரங்களில் நாம், நம்மை குறித்தே பெருமையாக எண்ணிக் கொள்கின்றோம். என்னுடைய முயற்சியால் தான் நான் இரட்சிக்கப்பட்டேன். என்னுடைய தேடுதலில் தான் நான் கர்த்தரை தெரிந்து கொண்டேன். என்னுடைய கிறிஸ்தவ பராம்பரியத்தால் தான் தலை நிமிர்ந்து வாழ்கிறேன் என்று தவறாக நினைத்து வாழ்கின்றோம்.

அப்படியல்ல! நாம் இரட்சிக்கப்பட்டிருப்பது கர்த்தருடைய கிருபை. நம்முடைய தான தர்மங்கள் நம்மை இரட்சிக்கவில்லை. நமது நற்பணிகள் நம்மை இரட்சிக்கவில்லை. நமது சன்மார்க்க பக்தி வைராக்கியம் நம்மை இரட்சிக்கவில்லை. கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இயேசுவால் தான் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கின்றோம். நாம் இயேசுவால் பெற்ற இரட்சிப்பின் பலன், நித்திய வாழ்வு. **"நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்"** (யோவான் 15:16).

நன்றியுள்ள இருதயத்தோடே கர்த்தருக்கு...

“அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியா மலுமிருந்து, தங்கள் சிந்தனைக ளினாலே வீணரானார்கள்; உணர்வில் லாத அவர்களுடைய இருதயம் இருளடைந் தது” (ரோமர் 1:21). ஒரு காரியத்தின் வெற்றிக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்தாமல், அவருக்கு மகிமை உண்டாக்காமல் அவர் மூலம் மனுஷ தயவை பெற்ற மனுஷனுக்கு நாம் எவ்வளவு கனத்தையும், நன்றியையும் தெரிவிக்கின்றோம் என்பதை நினைத்து பாருங்கள். என்னுடைய முயற் சியால், என் Tution Teacherயின் முயற்சியால், Coaching Class மூலமாய் நான் அதிக மதிப்பெண் எடுத்தேன் என்று எத்தனை முறை யோசித்திருப்போம். ஞானத்தின் ஆவி யானவர் நமக்குள் செயல்பட்டதை நினையாமல், ஞானத்தை அருளின கர்த்தருக்கு மகிமை செலுத்தாமல் மனுஷனை துதிபாடி, பிரியப்படுத்தின நிகழ்வுகள் எத்தனை என்பதை நினைத்துப் பாருங்கள். நன்றியுள்ள இருதயத்தோடே நாம் முதலாவது தேவனுக்கு மகிமையையும் கனத்தையும் செலுத்தும்பொழுது கர்த்தர் நம்மை குறித்து மகிழ்ந்திருப்பார். மென்மேலும் மனுஷ தயவை அருளி நம்மை ஆசீர்வதிப்பார். **“கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள்”** (சங்கீதம் 147:7).

எல்லா சூழ்நிலைகளிலும்...

“... உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்’’ (எபேசியர் 5:19,20). இந்த வசனங் களை அப்போஸ்தலனாகிய பவுல்

எழுதும் பொழுது சிறைச்சாலையில் கடினமாக துன்புறுத்தப்பட்டார். கி.பி. 62 முதல் 80 வருடங்களில், பவுல் தலை துண்டிக்கப்படுவதற்கு முன் இந்த வசனங்களை எழுதினார் என்று ஆராய்ச்சியாளர்கள் பதிவு செய்துள்ளனர். ஒரு கடினமான சூழ்நிலையில் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவது, நன்றி செலுத்துவது சாதாரண காரியம் அல்ல.

நெருக்கமான பாரங்கள் நம்மை அழுத்தும் போது, நாம் நாசியில் சுவாசம் உள்ள மனிதனை நம்புவதை காட்டிலிலும், அந்த சூழ்நிலையில் இருந்து நம்மை தப்புவிக்க வல்ல ஆண்டவருக்கு விசுவாசத்தோடே நன்றி சொல்லி பாருங்கள். அது தானியேல் தீ சூளையில் இருந்து வேகாமல் வெளியே வந்த அனுபவ மாக இருக்கும் **“எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது”** (1 தெச. 5:18).

அன்பான வாலிப தம்பி, தங்கை மாரே ஒரு குறிப்பிட்ட நாளை நியமித்து கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து, ஆண்டவருக்கு நன்றியை மட்டும் சொல்லிப் பாருங்கள் அந்த ஒரு நாள் உங்களுக்கு போதவே போதாது. “கர்த்தரை துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது” (1 நாளா. 16:34) ●

குழந்தைகளுக்கு கிறிஸ்துமஸ் பரிசு

கிறிஸ்துமஸ் நாட்களில் சிறு பிள்ளைகளுக்கு என்ன பரிசு பொருட்கள் வாங்குவது என்று தெரியாமல் இருக்கலாம். அவர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசு கொடுக்க சில டிப்ஸ் உங்களுக்காக...

காஃபிமக் [Coffee mug]

ஒரு காஃபிமக் வாங்கி சிறு பிள்ளைகளுக்கு பிடித்தமான சிறு படங்களை வரைந்து பரிசளியுங்கள். தினமும் காலையில் காஃபி குடிக்கும் போது உங்களை நினைத்துக் கொள்வார்கள்.

ஸ்வெட்டர்

டிசம்பர் மாதம் அதிக குளிராக இருப்பதால் குழந்தைகளுக்கு வெள்ளை மற்றும் சிவப்பு ஸ்வெட்டரில் சாண்டா கிளாஸ், ஜிங்கில் பெல்ஸ் அல்லது அவர்களுக்கு பிடித்த டிசைன் போட்ட ஸ்வெட்டரை பரிசாக அளிப்பது சிறந்த கிஃப்டாக இருக்கும். ஒவ்வொரு முறையும் அதை அணியும் போதும் உங்களை நினைப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

கைக்கடிகாரங்கள்

குழந்தைகளுக்கும் பெரியவர்களை போலவே கைக்கடிகாரங்கள் நிறைய மாடல்களில் வைத்துக் கொள்வதில் ஆர்வம் இருக்கும். ஆகையால் சிறுபிள்ளைகளுக்கு ஏற்றவாறு புது டிசைன்ஸ் போட்ட கைக்கடிகாரங்களை வாங்கி கொடுங்கள். எல்லா ஆடைகளுக்கும் போடுகிற மாதிரி கலரில் வாங்கிக் கொடுங்கள். மணி பார்க்கும் போதெல்லாம் உங்களையும் நினைத்துக் கொள்வார்கள்.

ரேச்சல்

கிறிஸ்துமஸ் அடையாளங்கள்

கிறிஸ்துமஸ் அடையாளங்கள்

கிறிஸ்துமஸ் தாத்தா கிறிஸ்துமஸ் நாட்களில் தாத்தா வேடம் போட்டு குழந்தைகளை மகிழ்விக்கும் வழக்கம் 19ஆம் நூற்றாண்டில் தோன்றியது. கிறிஸ்துமஸ் தாத்தாவை குறிக்கும் சாண்டா கிளாஸ் என்ற பெயர் செயின்ட் நிக்கோலஸ் என்பதிலிருந்து உருவானது. தொப்பி, தொப்பையுடன் கூடிய தற்போதைய சாண்டா கிளாஸ் உருவம், தாமஸ் நாஸ்ட் என்று அமெரிக்காவில் 1863ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை

1843ஆம் ஆண்டு இங்கிலாந்தை சேர்ந்த ஹென்றி கோல் என்பவர் முதன்முதலாக கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளை அச்சிட்டு அனுப்பினார். இவைதான் உலக வரலாற்றின் முதல் வாழ்த்து அட்டைகள். கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின்போது, நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களுடன் பரிசுப் பொருட்களை பகிர்ந்து கொள்ளும் வழக்கம் கடந்த நூற்றாண்டில் தோன்றி வளர்ந்தது.

கிறிஸ்துமஸ் நட்சத்திரம்

இயேசு பிறந்த போது வானில் தோன்றிய ஒரு நட்சத்திரத்தைப் பின்பற்றி கிழக்கத்திய ஞானிகள் சிலர் அவரை வணங்கச் சென்றனர். அந்த ஞானிகளுக்கு வழிகாட்டிய நட்சத்திரத்தை அடையாளப்படுத்தவே கிறிஸ்துமஸ் நாட்களில் நட்சத்திரங்கள் இடம் பெறுகின்றன. 16ஆம் நூற்றாண்டு முதல் நட்சத்திரங்களால் அலங்கரித்து வருகின்றனர்.

கிறிஸ்துமஸ் குடில்

இயேசு பெத்லகேமில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் ஏழ்மை நிலையில் பிறந்தார். இந்த செய்தி வயல்வெளியில் இருந்த இடையர்கள், வானதூதர்கள் மூலம் செய்தி அறிந்து இயேசுவைக் காணச் சென்றனர். முதன்முதலாக 1223 டிசம்பர் 25ஆம் தேதி கிரேச்சியா என்ற இடத்திலிருந்த குகையில் இயேசு பிறந்த காட்சியை மனிதர்களையும், மிருகங்களையும் கொண்டு அமைத்தார்கள்.13ஆம் நூற்றாண்டில் இந்த வழக்கம் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு பரவியது. 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் கிறிஸ்துமஸ் மரங்களை மெழுகு வர்த்திகளால் அழகுபடுத்தும் பழக்கம் உருவானது. தாமஸ் ஆல்வா எடிசனின் உதவியாளர் எட்வர்ட் ஜாண்சன், 1882ஆம் ஆண்டு முதன்முதலாக கிறிஸ்துமஸ் மரத்தை மின்விளக்குகளால் அலங்கரித்தார்.

கிறிஸ்துமஸ் கேக்

கிறிஸ்துமஸ் விழாவில் பகிர்தலை அடையாளப்படுத்தும் விதமாக கேக்குகளை வெட்டி பங்கிடும் வழக்கம் 18ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. மேற்கத்திய கலாச்சாரத்தின்படி கிறிஸ்துமஸ் விழாவின் சிறப்பான உணவாக கேக் கருதப்படுகிறது.

கிறிஸ்துமஸ் கீதம்

இயேசு பிறந்தபோது. பெத்லகேம் வயல்வெளியில் இருந்த இடையர்களுக்குத் தோன்றிய வானதூதர் இதோ, எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், இன்று ஆண்டவராகிய மீட்பர் உங்களுக்கு தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் என்றார். உடனே விண்ணகத் தூதர் பேரணி அவருடன் சேர்ந்து, உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக! என்று இயேசுவைப் புகழ்ந்துப் பாடிய இந்த பாடலே முதல் கிறிஸ்துமஸ் கீதம் (கேரல்) ஆகும். இயேசுவின் பிறப்பை அறிவிக்கும் கிறிஸ்துமஸ் கீதங்களை ஆலயங்களில் பாடும் பழக்கம் 4ஆம் நூற்றாண்டில் தோன்றியது ●

மவுன்ட் சினாய் 2019

அக்டோபர் 26 மற்றும் 27 ஆகிய இரண்டு நாட்கள் ஜெபமலை, பாண்டிச்சேரி, கோவை, புத்தூர், சென்னை, நாலுமாவடி மற்றும் வேலூரில் வைத்து வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச ஜெபம் (மவுன்ட் சினாய்) நடைபெற்றது. இதில் 5285 பேர் கலந்து கொண்டு தேசத்திற்காவும், அழிந்து போகிற வாலிபர்களின் இரட்சிப்பிற்காகவும் உபவாசித்து ஜெபித்தார்கள். அதுமட்டுமல்லாமல் ஜெபம் மற்றும் சுவிசேஷம் எப்படி அறிவிக்க வேண்டும் என்பதை போதித்தார்கள். அநேகர் சுவிசேஷம் அறிவிக்கிறோம் என்றும் திறப்பிலே நின்று ஜெபிக்கிறோம் என்றும் தீர்மானித்து சென்றுள்ளனர். ஊழியர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்தினார்.

இயேசுவின் பிறப்பைக் கண்டவர்கள்...

மேய்ப்பர்கள்

இரவில் மந்தையை காத்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு அன்று இரவு தங்கள் வாழ்வில் மறக்க முடியாத ஒரு நிகழ்வை தரிசிக்க போகிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது. மேய்ப்பர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவும், தாழ்த்தப்பட்டவர்களாகவும் இருந்தவர்கள். அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதும் இல்லை. ஆனால் அன்று இரவு இயேசு பிறப்பின் நற்செய்தியை முதலில் அறிவிக்க பரலோகத்தால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள் மேய்ப்பர்களே. தேவ தூதன் தரிசனமாகி, பயப்படாதிருங்கள்..., கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் (லூக்கா 2:10,11). இயேசு பிறப்பின் செய்தியை கேட்டவுடன் நாங்கள் மந்தையை காத்துக் கொண்டிருக்கிறோம், இப்பொழுது எங்களால் இயேசுவைப் பார்க்க முடியாது என்று சொல்லாமல், தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும் முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்.

வாலிபர்களே! நீங்களும் ஒருவேளை சமுதாயத்தால் தாழ்ந்தவர்கள் என்று ஒதுக்கப்படலாம், ஏழ்மையும், வறுமையான சூழ்நிலையில் இருக்கலாம், என்னை யாருக்குத் தெரியப் போகிறது என்ற கேள்வி குறியோடு இருப்பீர்களானால் உங்களுக்கு ஒரு நற்செய்தி; நீங்கள் பரலோகத்திற்கோ, தேவனுடைய கண்களுக்கோ மறைவாக இருப்பதில்லை. இரட்சகராகிய இயேசுவை தேடி போகும்போது பிரம்மாண்டமான காரியங்களை உங்கள் கண்கள் காணப் போகிறது!

சாஸ்திரிகள்

சாஸ்திரிகள் என்று கூறப்படுகிறவர்கள் நட்சத்திரங்கள், கிரகங்கள் ஆகியவற்றைக் குறித்து ஆராய்ச்சி செய்பவர்கள் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். இதுவரை அவர்கள் வாழ்க்கையில் கண்டிராத ஒரு நட்சத்திரத்தை கண்டார்கள். யூதருடைய ராஜா இஸ்ரவேலில் பிறந்திருக்கிறார் என்பதை குறிக்கிறது என்று கேள்விப்பட்டு மிகுந்த சந்ஷதோமடைந்து, இயேசுவை பணிந்துக் கொள்ள வந்தார்கள். நட்சத்திரமே அவர்களை வழிநடத்தியது. நட்சத்திரத்தை கண்டவுடன், அவர்கள் அந்த இடத்திலிருந்து புறப்பட்டு இஸ்ரவேல் வந்துசேர சில மாதங்கள் ஆகியிருக்கலாம் என்று வேத வல்லுநர்கள் சொல்கிறார்கள். இந்த ஒருசில மாதங்கள் கடினமான பயணம் மேற்கொண்டு இஸ்ரவேல் தேசம் வந்ததினால், இரட்சகராகிய இயேசுவை தரிசித்து, பணிந்துகொண்டு அவருக்கு பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் ஆகியவற்றை காணிக்கையாக செலுத்தினர்.

வாலிபனே! இன்று உன் வாழ்வில் உலகப்பிரகாரமான காரியங்களுக்கு கடினமான முயற்சி எடுக்கிறாய், நேரத்தையும் பணத்தையும் விலைக் கிரயம் செலுத்துகிறாய். ஆனால் அதே அளவு முயற்சியும் விலைக்கிரயமும் இயேசுவை அறியவும், அவருக் காக ஏதாவது செய்யவும் காண் பிக்கிறாயா?

இயேசுவின் பிறப்பைக் காண தவறியவர்கள்...

சத்திரக்காரன்

இயேசுவின் பிறப்பை கொண்டாடுகிற கிறிஸ்துமஸ் காலங்களில், வீடுகளில், சபைகளில் அல்லது பெரியஷாப்பிங் மஹாலில் பிறப்பின் காட்சியை பிரதிபலிக்கும் குடிலை அமைத்திருப்பார்கள். அதாவது ஒரு தொழுவத்தின் காட்சி அதில் முன்னணையில் குழந்தை இயேசு, மேய்ப்பர்கள், மரியாள், இயேசு மற்றும் மந்தைகள் இருப்பது போல் காட்சி இருக்கும். ஆனால் முன்னணைக்கு பதில் அந்த இடத்தில் சத்திரம் தான் இருந்திருக்க வேண்டும். சத்திரக்காரனின் இரக்க மற்ற செயலால் சத்திரமும், சத்திரக்காரனும் அந்த வாய்ப்பை இழந்து விட்டார்கள். மரியாளுக்கு பிரசவகாலம் வந்து பிள்ளைப் பெற்று, சத்திரத்தில் தங்க முடிவெடுத்தார்கள். ஆனால் சத்திரத்தில் இடம் இல்லாதபடியால் அவர்களை அனுமதிக்கவில்லை. எந்தவொரு மனிதனுக்கும் பச்சிளம் குழந்தையோடு ஒரு தாய் கடும் குளிரில் நிற்கும்போது, உதவி செய்யாமல் இருக்கவே முடியாது. சத்திரத்தில் இடமில்லை என்றாலும் அருகிலிருந்த வீட்டிற்கு அழைத்து சென்று உதவியிருக்கலாம். அந்த குழந்தையின் முக்கியத்துவத்தை உணராமலும் உதவி செய்யும் இருதயம் இல்லாததாலும் இயேசுவை காணும் வாய்ப்பை தவறவிட்டான்.

வாலிபனே! நம் வாழ்விலும், தேவன் நம்மை ஆசீர்வதிக்க அநேக வாய்ப்புகளை தருகிறார். நம்முடைய கீழ்ப்படியாமையினாலும், உணர்வில்லாமையினாலும் ஆசீர்வாதத்தை இழந்து விடுகிறோம். இனி இப்படிப்பட்ட வாய்ப்புகள் வரும்போது தவறவிடாமல் இருக்க தீர்மானிப்போம்!

வேதபாரகர்களும், பிரதான ஆசாரியனும்

பழைய ஏற்பாட்டிலுள்ள கட்டளைகளையும் பிரமாணங்களையும் தீர்க்கதரிசனங்களையும் (இயேசு பிறப்பின் தீர்க்கதரிசனம் (மத்2:5,6) உட்பட எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருந்தவர்கள்தான் வேதபாரகர்களும், பிரதான ஆசாரியனும். இப்படி தீர்க்கதரிசனத்தை துல்லியமாக அறிந்திருந்தாலும், வேதத்தை குறித்த அறிவுடையவர்களாய் இருந் தாலும் இயேசு என்னும் இரட்சகர் தங்களுக்காக பிறந்ததை அறியாதிருந்தார்கள். இயேசு அந்த ஊரில் பிறந்திருந்தாலும் இயேசு பிறந்த சில மாதங்களுக்குப் பிறகு கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள், ஏரோது ராஜாவுக்கு அறிவிக்க, ஏரோது ராஜா அதை வேத பாரகர்களுக்கும், பிரதான ஆசாரியனுக்கும் அறிவித்த பின்புதான் தெரிந்து கொண்டார்கள். இந்த சம்பவத்தின் மூலம் இஸ்ரவேலருக்கும் தேவனுக்கும் உறவே இல்லாத சூழ்நிலையை பார்க்க முடிகிறது. தேவனோடு நெருக்கமாக ஐக்கியத்தில் இருக்க வேண்டியவர்களும், இயேசுவின் பிறப்பை முதலில் அறிந்திருக்க வேண்டிய வேதபாரகர்களும், பிரதான ஆசாரியனும் தேவனோடு சரியான உறவும், ஐக்கியமும் இல்லாததினால் இயேசுவின் பிறப்பை காணும் வாய்ப்பை தவறவிட்டார்கள்.

வாலிபர்களே! சிறு வயது முதல் வேதத்தை கற்றும், வேதாகம தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று பரிசுகளை வாங்கி குவித்தாலும், இயேசுவுக்கும் உங்களுக்கும் சரியான உறவும், ஐக்கியமும் இல் லாதிருந்தால், அவர் இரண்டாம் முறை ராஜாதி ராஜாவாக, நியாயாதிபதியாக திரும்பி வரும்போது பரலோக பாக்கியத்தை இழக்க நேரிடும். எனவே இந்த கிறிஸ்துமஸ் காலத்தில் மீண்டும் இயேசுவோடு உங்கள் உறவை சீர்படுத்திக் கொள்ள வாய்ப்பாக அமையட்டும்!

மோகன் சி. லாசரஸ்

கிறிஸ்துமஸின் ஆசீர்வாதங்கள்

"தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்,..." 1 தீமோ. 3:16. இதுதான் கிறிஸ்துமஸ்! அதாவது, வானத்தையும், பூமியையும் உண்டாக்கிய தேவன், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவர், காணக் கூடாதவர், நம்மைப்போல ஒரு சாதாரண மனிதனாக இந்த உலகத்தில் வந்தார். **"(இயேசு கிறிஸ்து) தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம்,... கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" பிலி. 2:7,8.** அவர் நினைத்திருந்தால், ஒரு அரச குடும்பத்தில், ஒரு ராஜ குமாரனாக, ஒரு அரண்மனையில் பிறந்திருக்க முடியும்! ஆனால், அவர் ஒரு ஏழை தச்சனுடைய குடும்பத்தில், ஒரு ஏழ்மைக் கோலத்தில் அவதரித்தார். மகிமையின் தேவன், ஒரு சாதாரண மனிதனாக ஏன் இந்த உலகத்தில் அவதரிக்க வேண்டும்?

மனுக் குலத்தின் மீது, தான் வைத்த அன்பினால், மனிதர்களை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலையாக்கி, அவர்களை ஆசீர்வதிக்கவே, அவர் இரட்சகராக இந்த உலகத்தில் பிறந்தார். ஆகவேதான், இந்த இயேசு கிறிஸ்துவின் நிமித்தம், இன்று உலகமே மகிழ்கிறது. எல்லா நாடுகளிலும், எல்லா பாஷைக்காரர்களும் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். இயேசு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்கோ, ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கோ, ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கோ, ஒரு குறிப்பிட்ட மொழிக்கோ, ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கோ சொந்தமானவரல்ல! முழு உலகத்திற்கும் அவர் சொந்தமானவர்! ஆகவேதான், **"உலக இரட்சகர்!"** (1 யோவான் 4:14) என்று, இயேசு கிறிஸ்து அழைக்கப்படுகிறார்.

இதை வாசிக்கிற உங்களுக்கும் இயேசு கிறிஸ்துதான் இரட்சகர்! இயேசு கிறிஸ்து உங்களுக்காகப் பிறந்ததினால் உண்டான ஆசீர்வாதங்களை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் உண்மையான கிறிஸ்துமஸின் மகிழ்ச்சி! உங்களை ஆசீர்வதிக்கத்தான் அவர் மனிதனாக வந்தார். அந்த ஆசீர்வாதங்கள் என்ன? அவைகளை எப்படிப் பெற்றுக் கொள்வது? என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இயேசு கிறிஸ்து

உங்களை விடுவிக்க, அடிமையானார்!

"(இயேசு கிறிஸ்து) தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" பிலி. 2:7. தேவனுடைய ரூபமாயிருந்த இயேசு கிறிஸ்து, ஒரு அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார். அதாவது, மனுஷ ரூபமாய் காணப்பட்டு, சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலி. 2:8). மனிதன் பாவத்திற்கும், சாபத்திற்கும் அடிமைப்பட்டு, பிசாசின் பிடியில் சிக்கி வேதனைப்பட்டுக் கொண்டிருந்தபடியினால், அந்த அடிமைத்தனத்திலிருந்து அவனை விடுதலையாக்கும்படி, இயேசு கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்தார். மனுக் குலத்திற்கு விடுதலை கொடுப்பதற்காக, சிலுவையில் கட்டப்பட்டவராக, வானத்திற்கும்,

பூமிக்கும் நடுவாகத் தொங்கினார். அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலமாக மனுக் குலத் திற்கு விடுதலையை உண்டாக்கினார். **"...குமாரன் (இயேசு கிறிஸ்து) உங்களை விடுதலையாக்கினால், மெய்யாகவே விடுதலையாவீர்கள்" யோவான் 8:36**. ஒருவேளை, இன்றைக்கு ஏதோ ஒரு பாவத்திற்கு நீங்கள் அடிமைப்பட்டிருக்கலாம்! ஏதோ ஒரு பாவ சுபாவம் உங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கலாம்! மதுபானப் பழக்கம், புகை பிடிக்கும் பழக்கம், கோபம், எரிச்சல், இச்சை கள், பெருமை... என்று, ஏதோ ஒரு பாவம் உங்களை அடிமையாக்கி, உங்களை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கலாம்! உங்களுக்கு விடுதலையின் சந்தோஷத்தைக் கொடுப்பதற்காகத்தான், இயேசு கிறிஸ்து ஒரு அடிமையின் ரூபமெடுத்தார். எனக்கு ஒரு சகோதரியைத் தெரியும். மற்றவர்களோடு சண்டை போடுவதே அவர்களுடைய சுபாவம்! எங்கு சென்றாலும் யாரிடத்திலாவது சண்டை போடுவார்கள். அந்த சகோதரியினுடைய கணவருக்கு ஒரு பெரிய பிரச்சனை வந்து, குடும்ப சமாதானம் பாதிக்கப்பட்டது. "நான் செய்வது தவறு, என்று எனக்குத் தெரிகிறது. ஆனால், என்னை மாற்றிக் கொள்ள முடியவில்லையே!" என்று வருந்தினார்கள். அப்பொழுது தான் ஒருவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவர் கொடுக்கும் விடுதலையைப் பற்றியும் அவர்களுக்குச் சொன்னார். அவர்களும் விசுவாசத்தோடு இயேசு கிறிஸ்துவை தன் வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டு, தன் விடுதலைக்காக ஜெபித்தார்கள். இயேசு கிறிஸ்து, அவர்களுடைய பாவத்தை மன்னித்தது மாத்திரமல்ல, அந்தப் பாவ சுபாவத்திலிருந்து அவர்களுக்கு முழு விடுதலையையும் கொடுத்தார். அதோடு அவர்களுடைய சண்டை போடுகிற பழக்கம் மாறி, எல்லோரிடத்திலும் அன்பு காட்ட ஆரம்பித்தார்கள்.

இதற்குத்தான் இயேசு கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்தார்.

இன்றைக்கு நீங்கள் எந்த விதமான அடிமைத்தனத்தில் இருக்கிறீர்கள்? எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்திலிருந்து, **இயேசு கிறிஸ்து உங்களை விடுதலையாக்குவார், என்று விசுவாசியுங்கள்.**

உங்களை உயர்த்த,
தன்னைத் தாழ்த்தினார்!

"இயேசு மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" பிலி. 2:8. வானாதி வானங்களும் கொள்ளாத, சர்வ வல்லமையுள்ள தேவன், ஒரு சாதாரண மனுஷ ரூபமெடுத்து, தம்மைத் தாமே தாழ்த்தினார். ஏன் அவர் தன்னைத் தாழ்த்தினார்? நம்மை உயர்த்த, தன்னை இயேசு கிறிஸ்து தாழ்த்தினார்.

இங்கிலாந்து தேசத்தில், விக்டோரியா மகாராணியின் ஆட்சிக் காலத்தில், அடுத்து ராஜாவாக முடி சூட்டப்பட வேண்டிய இளவரசர், ஒரு ஏழைப் பெண்ணை நேசித்தார். அந்த ஏழைப் பெண்ணை தான் திருமணம் செய்வதாக சொன்ன போது, ராஜ குடும்பத்தார் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. "ஒரு இளவரசன், ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும், அப்பொழுதுதான் ராஜாவாக முடி சூட்டப்பட முடியும்," என்றார்கள். "ராஜ மேன்மையை நான் இழந்து போனாலும் பரவாயில்லை, நான் நேசிக்கும் அந்த ஏழைப் பெண்ணைத்தான் திருமணம் செய்வேன்," என்று அந்த இளவரசர் உறுதியாக இருந்து தான் நேசித்த அந்த ஏழைப் பெண்ணுக்காக, தன் ராஜ மேன்மையையே விட்டுக் கொடுத்து, அந்த ஏழைப் பெண்ணையே மணந்து கொண்டார். இப்படித்தான் இயேசு கிறிஸ்துவும், நமக்காக தன் பரலோக மேன்மையை விட்டுக் கொடுத்தார். அந்த ஏழைப் பெண் இளவரசரை மணந்தபடியினால், ராஜ குடும்பத்தைச் சார்ந்த பெண்ணாக உயர்த்தப்பட்டாள். இப்படித்தான் இயேசு கிறிஸ்துவின் மூலம், **"நான் தேவனுடைய பிள்ளை!"** என்கிற உயர்வை நாம் பெற்றுக் கொள்கிறோம் (யோவான் 1:12). அது மாத்திரமல்ல, உங்கள் படிப்பு, வேலை, வியாபாரம் எதுவாக இருந்தாலும் அதில் உயர்த்தப்படுவீர்கள். உங்களை உயர்த்தத்தான் இயேசு கிறிஸ்து தன்னைத் தாழ்த்தினார். அதை விசுவாசியுங்கள்! **விசுவாசித்து, உங்கள் உயர்வை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்!**

உங்களை ஐசுவரியவான்களாக்க,
தரித்திரரானார்!

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" 2 கொரி. 8:9.

“இயேசு கிறிஸ்து ஏழைக் கடவுள், அவரை நம்புகிறவர்களும் ஏழைகளாகத்தான் இருப்பார்கள்” என்று, சிலர் தவறாக எண்ணு கிறார்கள். இயேசு கிறிஸ்து ஏழைக் கடவுள் அல்ல, அவர் ஐசுவரியமுள்ள தேவன்! **“வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று... கர்த்தர் சொல்லுகிறார்.” ஆகாய் 2:8. “பூமியும் அதின் நிறைவும்,... கர்த்தருடையது” (சங்கீதம் 24:1)** என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. வானத்தையும், பூமியையும் உண்டாக் கிய ஐசுவரியமுள்ள தேவன், இந்த உலகத்தில் ஒரு மனிதனாக அவ தரித்தபோது, ஒரு ஏழை தச்சனுடைய குடும்பத்தில் பிறந்தார். அவர் பிறப்பதற்கு, ஒரு சத்திரத்தில் கூட இடமில்லாமல், ஒரு மாட்டுத் தொழுவத்தில்தான் அவதரித்தார். அவர் நினைத்திருந்தால், ஒரு ராஜ குடும்பத்தில்,

அரண்மனையில் அல்லது ஒரு பணக்காரக் குடும்பத்தில், குழந்தையாகப் பிறந்திருக்கலாம்! ஆனால் அவரோ, ஒரு ஏழைக் குடும்பத்தில், ஏழையாகவே அவதரித்தார். எதற்காக? **நம்முடைய தரித்திரத்தை மாற்றி, நம்மை ஐசுவரியவான்களாக்கும்படி, நமக்காகவே அவர் தரித்திரரானார்.** ஒரு ஏழை விதவைத் தாய், வீடு வீடாகச் சென்று, வீட்டு வேலைகளைச் செய்து, தன் மகனை நல்ல பள்ளியில் படிக்க வைத்து, நல்ல உடைகள் வாங்கிக் கொடுத்து, ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளையைப்போல, தன் மகனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள். தன் மகனுக்கு விதவிதமான உடைகளை வாங்கிக் கொடுத்த அந்தத் தாய், தனக்கென்று இருக்கும் ஒரே சேலையை துவைத்து, துவைத்து உடுத்துவார்கள். அது பல இடங்களில் கிழிந்து, கந்தலாகக் காணப்பட்டது. ஒரு கிறிஸ்துமஸ் பண்டிகை நாளன்று, அந்தத் தாய், அதிக விலையுள்ள புத்தாடையை வாங்கி, தன் மகனிடத்தில் கொடுத்தும், அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். ஆனால், தன் தாயின் கிழிந்து போயிருந்த சேலையைப் பார்த்து, “அம்மா, எனக்கே எல்லாம் வாங்கித் தருகிறீர்கள், உங்களுக்காக ஏன் ஒரு புதுச் சேலை வாங்கிக் கொள்ளக் கூடாது?” என்று துக்கத்தோடு கேட்டான். “நான் கூலி வேலை செய்து சம்பாதிக்கிற பணத்தில், உன்னை உடுத்துவித்து, அழகு பார்ப்பதே எனக்குச் சந்தோஷம். உனக்காகத்தான் நான் என்னை ஏழ்மையாக்கிக் கொண்டேன்” என்று, அந்தத் தாய் சொன்னபோது, தன் தாயின் அன்பை உணர்ந்தவனாய், அந்தத் தாயை அணைத்துக் கொண்டான். இப்படித்தான் இயேசு கிறிஸ்துவும், நமக்காக, நம்மை ஐசுவரியவான்களாக்க, தன்னையே ஏழ்மையாக்கிக் கொண்டார். இதை **விசுவாசித்து ஜெபித்தால்,** உங்கள் பணப் பிரச்சனை எல்லாம் மாறும்படி, கர்த்தர் அற்புதம் செய்வார். **விசுவாசத்தோடு ஜெபியுங்கள்.**

உங்களை நிறைவாக்க,

தன்னையே வெறுமையாக்கினார்!

“(இயேசு கிறிஸ்து) தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்” பிலி. 2:7. இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஒரு மனிதனாக வந்தபோது, தம்மைத்தாமே வெறுமையாக்கினார். நம்முடைய குறைவுகளை மாற்றி, நம்மை நிறைவாக்க, நமக்காகவே அவர் தம்மை வெறுமையாக்கினார். இன்று உங்கள் வாழ்க்கையில் என்ன குறைவு காணப்படுகிறது? ஞானத்தில் குறைவு! ஞாபக சக்தியில் குறைவு! வியாதியினால் ஆரோக்கியக் குறைவு! “வேலை இல்லை!” இன்னும் எதிலே குறைவுடையவர்களாக இருக்கிறீர்கள்? எந்தக் குறைவாக இருந்தாலும், **உங்கள் குறைவை நிறைவாக்கத்தான் இயேசு கிறிஸ்து தன்னையே வெறுமையாக்கினார் என்று விசுவாசியுங்கள்!** எனக்கு ஒரு ஊழியக்காரரைத் தெரியும். கஷ்டப்பட்டு, பல குறைவுகளோடு ஊழியம் செய்து வந்தார் “இப்படிக் குறைவுகளோடும், பாடுகளோடும் ஊழியம் செய்வதுதான் உண் மையான ஊழியம். இயேசு கிறிஸ்துவும் கூட தனக்கென்று ஒன்றுமில்லாமல்தான் ஊழியம் செய்தார்” என்று, குறைவுகள் மத்தியிலும் திருப்தியாக இருந்தார். அப்போதுதான் ஒரு சமயம், கர்த்தர் அவரிடத்தில், “நான் என்னை வெறு மையாக்கியது, உன் குறைவை நிறைவாக்கத்தான், நீ குறைவுகளோடு கஷ்டப்படுவது என் விருப்பமல்ல, நான் உன் குறைவுகளை நிறை வாக்குவேன்” என்று பேசி, அவருக்கு விளங்கப் பண்ணினார். அப்பொழுது அவருக்குள் விசுவாசம் வந்தது. “இயேசுவே, என் குறைவுகளை மாற்ற உம்மை வெறுமையாக்கினீர் என்பதை நான் விசுவாசிக்கிறேன்!” என்று ஜெபிக்க ஆரம்பித்தார். ஜெபிக்க, ஜெபிக்க, குறைவுகள் நீங்கியது. நிறைவான ஆசீர்வாதம் அவருக்கு உண்டாயிற்று. உங்கள் வாழ்க்கையிலும், ஏதோ ஒரு குறைவினால் நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கலாம்! இயேசு கிறிஸ்து உங்களுக்காக தம்மை வெறுமையாக்கினார் என்பதை விசுவாசியுங்கள்.

கிறிஸ்துமஸ்’ என்றால், வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல, கிறிஸ்துமஸின் ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். நம்மை ஆசீர்வதிக்கத்தான் இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் அவதரித்தார். இந்த ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்வது மாத்திரமல்ல, மற்றவர் களும் இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள, நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இதுதான் கிறிஸ்துமஸின் உண்மையான சந்தோஷம்! கிறிஸ்துமஸின் ஆசீர்வாதங்களையும், மகிழ்ச்சி யையும் பெற்றுக் கொள்ள, கர்த்தர் உங்களுக்குக் கிருபை தருவாராக!

ஜிஷ்யா

மீட்பர்

டிசம்பர் மாதம் என்றாலே எல் லாருக்கும் நினைவில் வருவது, கிறிஸ்துமஸ் பண்டிகை தான். அட! இதில் என்ன விசேஷம்? ஒவ்வொரு வருடமும் வழக்கமாக நடக்கும் பண்டிகை தானே! இயேசுவின் பிறப்பை அற்புதமாக கிறிஸ்துமஸ் என்று கொண்டாடுகிறோம், இதில் என்ன 'தனித்தன்மை வாய்ந்த மீட்பர்' என்று தானே யோசிக்கிறீர்கள், ஹம்ம்... புரியுது அதைப்பற்றித் தான் உங்களோடு பேசப்போகிறேன்.

இயேசுவின் பிறப்பு தனித்தன்மை வாய்ந்தது, கன்னியின் கருவில் குழந்தை உருவானது [லூக்கா 1:26-38]

யோசேப்பிற்கும் மரியாளிற்கும் நிச்சய மாகி இருந்தது. இந்த காலத்தைப் போல், அந்த நாட்களில் நிச்சயமான பெண்ணோ / ஆணோ தனியே சந்தி த்து பேசுவது, வெளியே செல்வது, இப்படி எதற்குமே அனுமதிக் கப்படாத நாட்கள் அது. அப்படியிருக்க கன்னியின் வயிற்றில் குழந்தையா? இதுவரை கேள்விப்படாத நிகழ்வாக இருக்கிறதே என்று அனைவரும் பிரமிப்பதற்குள், யோசேப்பு இரகசிய மாய் மரியாளை தள்ளிவிட எண்ணினார். ஆனால் இது முழுவதும் தேவனுடைய திட்டம், அவருடைய செயல் என்பதால் அற்புத விதமாய், நம் சிந்தனைக்கு அப்பாற்பட்டு கன்னியின் கருவில் அக்குழந்தை உருவாகி, வளர்ந்தது, தனித்தன்மை வாய்ந்தது தானே...!

பிறப்பில் தனித்தன்மை [லூக்கா 2:1-6]

பிதாவின் செல்ல மகனாக, ராஜா வீட்டு பிள்ளையாக இருக்க வேண்டிய 'இயேசு' ஏன் மாட்டு தொழுவத்தில், ஏழையின் ரூபமெடுத்து பிறக்க வேண்டும்? "நாம் ஐசுவரியவானாகும்படி கிறிஸ்து தரித்திரரானார்" இப்படி சுயநலமற்ற அவருடைய பிறப்பு, நமக்காக, நாம் விடுதலையாய் அவருடைய ஐசுவரியத்தை அனுபவிக்க வேண்டும் என்ற அவருடைய இருதயம், தனித்தன்மை வாய்ந்தது தானே..!

பெயரின் தனித்தன்மை [மத்தேயு 1:18-25]

ஒவ்வொரு பெற்றோரும் ஆர்வமாய், தங்கள் குழந்தைகளுக்கு பெயரிடுவார்கள். ஆனால் இயேசு பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பே, 'இந்த குழந்தைக்கு' இம்மானுவேல் அதாவது 'இயேசு' என்று பெயரிட்டு அழைக்கப்படுவார் என்று எழுதப்பட்டிருந்தது. இதற்கு எபிரெய மொழியில், 'தேவன் நம்மோடு' என்பது அர்த்தமாகும். இப்படி தனித்தன்மை வாய்ந்தவரின் பிறப்பைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், இதுவே அவருடைய பிறப்பின் மேன்மைகள். அவர் கருவில் உருவானது அறிவியல், மருத்துவ யோசனைக்கு அப்பாற்பட்டது. ராஜாவாக பிறக்க வேண்டியவர் மாட்டு தொழுவத்தில் பிறந்தது, மனித யோசனைக்கு அப்பாற்பட்டது. இறுதி யாக உலகத்தின் முடிவு பரியந்தமும் சதா நாட்களிலும் நம்மோடு இருப்பது. நம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டது..! இந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்டத் தின் போது, இந்த இம்மானுவேலராய் நம்மோடே இருக்கும், இயேசுவை கொண்டாடுவோம். மருத்துவ உலகத் திற்கு அறிவியல் யோசனைக்கு அப்பாற்பட்டு உங்கள் வாழ்வில் புதி ய சரித்திரத்தை படைக்க தேவன் ஆவலாய் காத்துக்கொண்டிருக்கிறார். உங்கள் வாழ்க்கை தனித்தன்மை வாய்ந்தது. உங்கள் எதிர்கால திட்டங்களும் தனித்தன்மை வாய்ந்தது, மற்றவரோடு உங்கள் வாழ்க்கையை ஒப்பிடாமல், (தேவனில்) இம்ம ானுவேலரான அவ ரோடு நேரம் செலவளிக்கும்போது, உங்கள் வாழ்க்கை ஆசீர்வாதமாக அமையும் என்பதில் சந்தேகமேயில்லை! ●

வேதாகம புதையல் வேட்டை

அனுப்ப வேண்டிய கடைசி நாள் 15.12.2019

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் உயிர்த்தெழுதல் வரை அவருடைய வாழ்க்கை சம்பவத்தோடு (1–10) வரை உள்ள எண்கள் தொடர்புடையதாயிருக்கிறது. சரியான விடையை கண்டறிந்து, வேத ஆதாரத்துடன் எங்களுக்கு எழுதி அனுப்பவும்.

1 2 3

6 5 4

8 7

10 9

கடந்த மாத வெற்றியாளர்

கிறிஸ்டி, கோவில்பட்டி
அவர்களை வாழ்த்துகிறோம்

கடந்த மாத விடைகள்

1. மெத்தூசலாவின் நாட்கள் (ஆதியாகமம் 5:25–27)
2. மீன்கள் எண்ணிக்கை (யோவான் 21:10,11)
3. இயேசுவின் சரித்திர வரலாறு (மத்தேயு 1:17)
4. ஆபிரகாம் பலி செலுத்துதல் (ஆதியாகமம் 15:9)
5. எலியா பலிபீடத்தில் ஊற்றிய 12 தண்ணீர் குடம் (1 இராஜாக்கள் 18:34)
6. (லேவி. 26:8)
7. தன் குடும்பத்தை தாவீதோடு மீட்க போனவர்கள் (1 சாமுவேல் 30:10)
8. (1 சாமுவேல் 18:7)
9. 8,03,550 (எண்ணாகமம் 2:32)
10. திருப்பணி வேலைக்கு கொடுக்கப்பட்ட காணிக்கை (எஸ்றா 2:69)

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

Jesus Redeems Youth Ministries
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 220022
youth@jesusredeems.org

நிறைவுள்ள கிறிஸ்துமஸ்

நிறைவான கிறிஸ்துமஸ் கொண்டாட சில வழிமுறைகள்...

◆ கிறிஸ்துவைப் பற்றி அறிந்த கிறிஸ்தவ இல்லங்களுக்கே பாடல் பவனி (Carols) செல்வானேன்? நம் சுற்றுவட்டாரங்களில் உள்ள கிறிஸ்தவரல்லாதோரின் இல்லங்களுக்கு சென்று வாழ்த்து அட்டை அல்லது புதிய ஏற்பாடு கொடுத்து இயேசு பிறப்பை பற்றி சொல்லி வரலாமே!

◆ஏழை எளியக் குடும்பங்களைத் தேடி, அவர்களுக்கு உணவு, புத்தாடைக் கொடுத்தால் நிறைவான மகிழ்ச்சி அடையலாமே!

◆அலங்கார பொருட்கள் கடைகளில் வாங்குவதைவிட, நாம் நமது கைகளினாலே சிறு சிறு நட்சத்திரங்கள், மரம், தாத்தாவின் தொப்பி போன்றவற்றை காகிதங்களில் செய்து வீட்டை அலங்கரிக்கலாமே!

◆கிறிஸ்துமஸ் போட்டிகளில் கிறிஸ்தவரல்லாத சிறுவர் சிறுமிகளைச் சேர்த்து அவர்களை உற்சாகப்படுத்தலாமே!

◆கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் என்று வீடுகளிலும், சபைகளிலும், அலுவலங்களிலும் நடத்தி அவர்களுக்கு ஒரு சிறு பரிசளிக்கலாமே!

◆ரோட்டோரங்களில் உணவு, உடையின்றி தவிக்கும் ஒவ்வொருவருக்கும் உணவு, உடை கொடுத்து அவர்களின் பசியாற்றலாமே!

◆முதியோர் இல்லங்களுக்குச் சென்று ஆதரவில்லாமல் தவிக்கும் ஒவ்வொருவருக்கும் இயேசுவாகிய தேற்றரவாளனை அறிமுகப்படுத்தலாமே!

கிறிஸ்து பிறப்பை நமக்கு நாமே கொண்டாடுவது நிறைவான கிறிஸ்துமஸ் அல்ல. ஏழை, எளிய மற்றும் இயேசுவை அறியாதவர்களுக்கு இயேசுவின் அன்பை அறிவிப்பதே நிறைவான கிறிஸ்துமஸ்! ●

ஜிஷ்யா

உணர்ச்சிகளைக் கையாளுவது எப்படி?

உணர்வுகள்
பகுதி 10

மன சோர்வு

"என்ன ஆச்சுன்னு தெரியல, சரியா சாப்பிடமாட்டேன்கிறாள்... தூங்க மாட்டேன்கிறாள்... எங்கேயும் வெளிய போகமாட்டேன்கிறாள்... எப்போ கோபப்படுவா? எப்போ அமைதியா இருப்பா....? இப்படி எதுவுமே இவளைப் பற்றி புரிஞ்சுக்க முடியல..." என்று பல பெற்றோர்கள் சொல்வதை கேட்டிருக்கிறேன். இதற்கு அந்த நபரை குறை சொல்வது சரியாகாது. இந்த நபர் நீங்களாக இருக்கலாம், அல்லது உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களாகவும் இருக்கலாம்.

யாருக்கு எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்படலாம். எனவே அதைப்பற்றி தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். இரண்டு வாரத்திற்கு மேல் 'சோகம்' என்னும் உணர்வு காணப்பட்டால் அது மனசோர்வாக கருதப்படுகிறது. சரீரத்தில் உள்ள நோயை போல் இது மனதில் உள்ள ஒருவித மன நோயாக (Mental illness) கருதப்படுகிறது. இது நீண்ட நாட்கள் தொடர்ந்து இருக்கும் போது 'சோகம்' என்னும் உணர்வாக மாறிவிடுகிறது....

தங்களை தாழ்வாகவும் எதற்குமே உபயோகமில்லாதவர்களாய் பார்க்க வைக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களை மட்டம் தட்டாமல், உங்களால் முடிந்தவரை அவர்களோடு இருந்து, அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

மனச்சோர்வினால் பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளைப் பார்க்கலாம்

- சோகமாகவே இருப்பார்கள்.
- எதற்கும் ஆர்வம் இல்லாதவர்களாய் சோர்வாகவே இருப்பார்கள்.
- சரியாக தூங்க மாட்டார்கள் அல்லது அதிகம் தூங்குவார்கள்.
- குற்ற உணர்வோடும் தாழ்வு மனப் பான்மையோடும் காணப் படுவார்கள்.
- தற்கொலை எண்ணமும் எட்டிப்பார்க்கும்.

ஒரு வேளை நீங்களோ அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களோ இப்பாதையின் வழியே சென்றுக் காண்டிருப்பார்களானால், அவர்களுக்கு எப்படி உதவுவது?

- அவர்களோடு தொடர்பிலேயே இருங்கள்... Advice பண்ணாதீங்க, குற்றப்படுத்தாதீங்க... துணையாக அவர்களோடு இருங்கள்.

- தேவைப்பட்டால் மருத்துவர்களின் உதவியை நாடுங்கள்.
- ஏன் நமக்கு மட்டும் இப்படி நடக்கிறது என்று குழம்பி சோகத்தில் மூழ்காதீர்கள்.

▸ அவர்கள் சொல்வதை காது கொடுத்து கேளுங்கள்.
ஒரு வேளை இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் மனசோர் வோடு காணப்படுவீர்களானால், கவலையை விடுங்க.., ஏன் இப்படி உணர்வலைகளின் மாற்றம் ஏற்படு கிறது என்பதை தெரிந்து கொண்டால், உங்களால் இதிலிருந்து சுலபமாக வெளியே வர முடியும்.

தெரிந்து கொள்ளுங்கள்

▸ மூளையில் உள்ள கெமிக்கலின் நிலையில் மாற்றம் ஏற்படுவதால், மனசோர்வு ஏற்படுகிறது (Brain Chemistry Imbalances).

▸ அதாவது சந்தோஷத்தை தூண்டக் கூடிய ஹார்மோன்களான Dopamine, Serotonin போன்ற அமிலங்களை இணைக்கக்கூடிய நரம்பியல் கடத் திகளில் (Neurotranssisttus) எதிர் பாராத மாற்றம் ஏற்படுவதால் மன சோர்வு ஏற்படும்.

▸ ஹார்மோன்கள் சுரப்பதில் மாற்றம் ஏற்பட்டால், அது மனசோர்வை கொண்டு வரும்.

▸ தாழ்வு மனப்பான்மை உள்ளவர்களிடம் இப்படிப்பட்ட உணர்வு அதிகம் காணப்படும்.

▸ மனஅழுத்தம் மற்றும் சோகமான நிகழ்வு, மனசோர் வை ஏற்படுத்தும்.

▸ இது சந்ததி சந்தியாய் தொடரக் கூடியது என்றும் ஆய்வறிக்கை கூறுகிறது.

இப்படி நம் சரீரத்தை சார்ந்து, மூளையில் உள்ள அமிலங்களின் மாற்றங்களின் அடிப்படையில், அல்லது சோகமான நிகழ்வின் விளைவாக இது ஏற்படுகிறது என்பதை பார்த்தோம்.

வேதத்தில் இப்படி மன சோர்வினால் பாதிக்கப்பட்ட பலரையும், அவர்கள் எப்படி தேவனை சார்ந்துக் கொண்டார்கள் என்பதையும் பார்போம்.

1 இராஜாக்கள் 19:4ம் வசனத்தில் "அவன் வனாந்திரத்தில் ஒருநாள் பிர யாணம்போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி: போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி" தைரியசாலி, பல பாகால் தீர்க்கதரிசிக ளுக்கு சவால் விட்ட ஹூரோ, அனைவரும் பயந்த தருணத்தில் தைரியமாக துணிந்து செயல்பட்டவர் என்று இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்..!

ஆனால் இவருடைய வாழ்விலும் மனசோர்வு மற்றும் மனக்கவலை தலை தூக்கியது. நாம் பார்த்தபடி, இவர் சரியாக சாப்பிடவில்லை, தனியாக ஒரு இடத்திற்கு வந்து நாள் முழுவதும் தூங்கிக்கொண்டே இருந்தார். எதிலும் ஆர்வமில் லாதவராய் வாழவும் விருப்பமில் லாதவராய் காணப் பட்டார். ஆனால் அவரைத் தேடி தேவன் வந்தார், தேவ தூதர்கள் உணவளித்து, உற்சாகப்படுத்தி பெலப்படுத்தினார்கள். மறுபடியும் தன் ஓட்டத்தை துவங்கினார் எலியா. இப்படி பல உதாரணங்களை சொல்ல முடியும், பலரும் மன சோர்வோடு காணப்படுவதாக ஆய் வறிக்கை கூறுகிறது. உலகிலேயே, இந்தியாதான் அதிகம் தற்கொலைகள் நடப்பதாகவும், அதற்கு மனசோர்வு மற்றும் மன அழுத்தம் ஒரு காரணமாகவும் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட உணர்வுகளின் மாற்றத்தில் சிக்கித் தவிப்பவர்களுக்கு உதவுவது நம் பொறுப்பு. அவர்களோடு நேரம் செலவளிப்போம், பொறுமையாக இயேசுவை அவர்களுக்கு அறிமுகம் செய்வோம், அவர்களுக்காக ஜெபிப் போம், தேவைப்பட்டால் மனநல மருத்துவரிடமும் அவர்களை அழைத்து செல்லலாம்.

நீங்கள் இந்த மனசோர்வினால் கஷ்டபடுவீர்களானால்...

▸ நல்ல ஐக்கியத்தில் உங்களை தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள்.

▸ எங்களைப் போன்றவர்களோடு தொடர்பு கொண்டு பேசுங்கள்.

▸ தேவனின் உதவியை நாடுங்கள்.

நிச்சயமாகவே, நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அந்த சந்தோஷத்தை சீக்கிரமாக அனுபவிப்பீர்கள். மனம் தளராதீர்கள்... உங்கள் மனசோர்வில் இருந்து தேவன் தரும் விடுதலையை அனுபவிப்பீர்கள்.

- உணர்வுகள் தொடரும்...

ஜெபம்
எஸ்தர்

ஜெபக் கையேடு

டிசம்பர் 2019

உங்கள் ஜெபக்குழுவில் நீங்கள் ஜெபித்து பதில் கிடைத்த சாட்சிகள் இருந்தால் எங்களுக்கு எழுதுங்கள். தினமும் ஒரு நிமிடம் தேசத்திற்காய் திறப்பிலே நிற்போம்... தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புக்காக முழுமனதோடு ஜெபியுங்கள்.

சட்டத்துறை

1 தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் சி.வி. சண்முகம் அவர்களின் பாதுகாப்பிற்காகவும், இத்துறையை மேன்மைபடுத்துவதற்கான ஞானம் உண்டாக ஜெபிப்போம்.

2 நீதி விசாரணைகள் விரைந்து நடைபெறவும், நீதித்துறையில் பணிபுரியும் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட ஜெபிப்போம்.

3 நீதித்துறையில் நேர்மையாய் வழக்குகள் விசாரிக்கப்படவும், தேங்கியுள்ள வழக்குகளை சீக்கிரத்தில் முடிக்கப்பட நீதிபதிகள் முன்வர அரசு தகுந்த சட்டம் ஏற்றப்பட ஜெபிப்போம்.

4 நீதித்துறையில் காலிப்பணியிடங்கள் தகுந்த நபர்களை கொண்டு நிரப்பப்பட ஜெபிப்போம்.

5 தமிழ்நாட்டில் மொத்தம் 1149 நீதிமன்றங்களும், சென்னையில் 126, இதர மாவட்டங்களில் 1023 நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன. இவை சரியான முறையில் செயல்பட்டு, வழக்குகள் விசாரிக்கப்பட ஜெபிப்போம்.

6 நீதித்துறையில் காணப்படும் ஊழல், லஞ்சம் அடியோடு அகற்றப்படவும், ஏழை, எளிய ஜனங்கள் பாதிக்கப்படாமல் வழக்குகளை முடிக்கப்பட ஜெபிப்போம்.

7 வழக்கறிஞர்களுக்கு, நீதிபதிகளுக்கு எந்தவொரு நிரபராதியும் தண்டிக்கப்படாமல் தகுந்த விசாரணை செய்ய வேண்டிய ஞானம், கிருபை கிடைக்கப் பெற ஜெபிப்போம்.

புற்றுநோய்

8 உலகில் ஆண்டுதோறும் 17 லட்சம் பேருக்கு ஏதாவது புற்றுநோய் ஏற்படுவதாக ஆய்வு கூறுகிறது. இந்நோய் தடுக்கப்பட ஜெபிப்போம்.

9 உலகில் ஏதாவது ஒரு புற்றுநோயினால் 10 லட்சம் பேர் மரணமடைவதாக கணக்கெடுப்பு கூறுகிறது. புற்றுநோய் கிருமிகள் யாரையும் தாக்கி மரணங்கள் ஏற்படாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

10 பெண்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் ஒன்றரை லட்சம் பேருக்கு ஏற்படுகிறது. பெண்களுக்கு ஏற்படும் இந்த வியாதி வராமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.

11 கருப்பைப் புற்றுநோயால் 72 ஆயிரம் பேர் இறக்கின்றனர். இனியும் இப்படி மரணங்கள் ஏற்படாமல் தடுக்கப்பட்ட தகுந்த சிகிச்சை முறைகள் கண்டுபிடிக்கப்பட ஜெபிப்போம்.

12 மார்பக புற்றுநோயினால் ஒரு வருடத்தில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் பெண்கள் பாதிக்கப்படுவதாக ஆய்வறிக்கை கூறுகிறது. பெண்களுக்கு ஏற்படும் இந்த வியாதிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

13 ஒரு வருடத்தில் 85 ஆயிரம் ஆண்களுக்கும், 35 ஆயிரம் பெண்களுக்கும் நுரையீரல் புற்றுநோய் ஏற்பட்டு பாதிக்கப்படுகிறவர்கள் சுகம் பெற ஜெபிப்போம்.

14 நம் தேசத்தில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் அனைவரும் சுகம் பெறவும், இனியும் யாரையும் இந்த கிருமி தாக்காதபடி தேவன் பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம்.

மனநலம் பாதிப்பு

15 உலக அளவில் 45 கோடி மக்கள் மனநலக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். மனநல பாதிப்பிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட்ட ஜெபிப்போம்.

16 மனநல பாதிப்பு ஏற்படாமல் அன்றாட சவால்களை எதிர்கொள்வதற்கு வேண்டிய மன தைரியத்தையும், திறனையும் இன்றைய இளைஞர்கள் கற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

17 13,500 மனநல மருத்துவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் வெறும் 3,827 மருத்துவர்களே பணி செய்கிறார்கள். தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு சரியான சிகிச்சைகள் கொடுக்கப்பட ஜெபிப்போம்.

18 தேவையான உளவியல் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு ஆலோசனை வழங்கவும், அரசாங்கம் செயல்முறை படுத்தப்பட ஜெபிப்போம்.

19 கடந்த 2017ஆம் ஆண்டு அறிக்கையின்படி 20 சதவீத இந்தியர்கள் மனஅழுத்தத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்திய ஜனங்களின் மன அழுத்தங்களிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

20 மனநல பாதிப்பால் தற்கொலை செய்வது அதிகரித்து வருவதும், குடும்பத்தாரால் புறக்கணிக்கப்படுவதும் அதிகரித்து வருகிறது. இவர்களுக்கு பாதுகாப்பு மையங்கள் அமைத்து தகுந்த சிகிச்சை அளிக்கப்பட ஜெபிப்போம்.

21 தொண்டு நிறுவனங்கள் முன்வந்து மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை மையங்கள் மற்றும் விழிப்புணர்வு மையங்கள் அமைத்து அவர்கள் சீர்படுத்தப்பட ஜெபிப்போம்.

மதுபானம்

22 தமிழ்நாட்டில் 40% பேர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் ஜனங்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

23 குடிப்பழக்கத்தை தூண்டுகிற குடிவெறியின் ஆவிகள் கட்டப்பட, குடிப்பழக்கத்தினால் ஏற்படும் குற்றங்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

24 மதுபானம் அருந்துவதால் 5.9% மரணங்களும், 5.1% நோய்களும் ஏற்படுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

25 இந்தியாவில் மதுபானம் அருந்தும் 62.5 மில்லியன் மக்கள் மதுபான பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

26 இந்தியாவில் 18 வயதிலிருந்து 9.7% ஆண்களும் 46-55 வயதுக்குட்பட்டோர் 17.1% ஆண்களும் மது அருந்துகிறார்கள். இத்தீய பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

27 மதுவிலக்கு நம் தேசத்தில் கொண்டு வரவும், மதுவில்லா தேசமாக மாறவும் ஜெபிப்போம்.

28 உலகில் 3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மதுபானம் குடிப்பதினால் உயிரிழந்துள்ளனர். நம் தேசத்தில் மதுபானத்தினால் உயிரிழப்புகள் ஏற்படாதவாறு தடுக்கப்பட ஜெபிப்போம்.

விபச்சாரம்

29 இந்தியாவில் விபச்சார தொழிலில் ஈடுபடும் 10 மில்லியன் பேர் மனந்திரும்பவும் இப்பாவத்திற்கு அடிமைப்படுத்தி வைத்திருக்கும் வாலிபர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

30 விபச்சார பாவத்தில் சிக்கிய வாலிப ஆண்கள், பெண்கள், குழந்தைகள் விடுவிக்கப்பட கருத்தாய் ஜெபிப்போம்.

31 இந்தியா முழுவதும் இருக்கும் விபச்சார விடுதிகளும், வலைத்தளங்களும் மூடப்பட ஜெபிப்போம்.

ரவி

நன்றி

ஆண்டின் கடைசி மாதமாகிய டிசம்பர் மாதத்தில் வந்திருக்கிறோம். இந்த மாதம் நாம் "நன்றி" என்ற தலைப்பில் சில காரியங்களைப் பார்க்கவிருக்கிறோம். ஆவிக்குரிய வாழ்க்கையில் இயேசுவை பின் தொடரும் ஒவ்வொரு சீஷனுக்கும் சீஷிக்கும் மிகவும் ஆழமான அர்த்தமுள்ளதாக இந்த வார்த்தைக் காணப்படும். சொல்லப்போனால் பெரும்பான்மையான விசுவாசிகளுக்கு அவர்களுடைய விசுவாச வாழ்க்கை நன்றியில் தான் ஆரம்பமாகிறது.

சற்று நாம் சிந்தித்துப் பார்ப்போமானால், தேவனுடைய பாதுகாவலும், கிருபையும், தயையும் நம் வாழ்வில் இல்லா மற்போனால், நாம் எப்பொழுதோ அழிந்து போயிருப்போம். ஆனால் பல நேரங்களில் நன்மைகளையும், ஆசீர் வாதங்களையும் பெற்று அனுபவிக்கத் தெரிந்த நமக்கு அதை நம் வாழ்க்கையில் கொடுத்த தேவனுக்கு நன்றி சொல்ல தெரிவதில்லை. நம்மையே நாம் உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம். தேர்வில் நல்ல மதிப்பெண்கள் வேண்டும் என்று ஜெபிக்கத் தெரிந்த நமக்கு ஜெபித்தபின் அதற்காக தேவனுக்கு நன்றி சொல்ல மறந்துவிடுகிறோம். நல்ல கல்லூரியில் இடம் கிடைக்க, இல்லையென்றால் நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்க வேண்டும் என்று ஜெபிக்க தெரிந்த நமக்கு, அந்த ஜெபத்தின் பலன் கிடைத்த பின் நன்றி சொல்லத் தெரிவதில்லை.

ஆம் என் நண்பர்களே! கொடையை பெறத்தெரிந்த நாம், பல நேரங்களில் கொடுத்தவரை மறந்து விடுகிறோம். பூமிக்குரிய ஆசீர்வாதங்களும் அதற்கான நன்றியுணர்வும் ஒருபுறம் இருக்க, இதற்கு மிஞ்சின நித்திய ஆசீர்வாதத்தை நம் பிதாவாகிய தேவன் நமக்கு தந்தாரே அதைக் குறித்துத்தான் பார்க்கப் போகிறோம்.

ரோமர் 5ஆம் அதிகாரத்தில் "நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒரு வேளை ஒருவன் மரிக்கத் துணிவான்" என்று சொல்லுகிறது. ஆம் நண்பர்களே, நம்மை பாவம், மரணம் என்பவைகளின் பிடியிலிருந்து

மீட்டெடுக்கவும், தேவனோடு முறிந்துபோன நல்லுறவை மறுபடியும் புதுப்பிக்கவும், அவர் நமக்குள் வாசம் செய்யும் படியான ஒரு பாக்கியத்தை ஏற்படுத்தவும், எல்லாவற்றிற்கும் மேலாக நித்திய காலமாக தம்மோடு நாம் இருக்கவும், தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நமக்காக ஒப்புக்கொடுத்தார். இந்தச் சுவிசேஷ சத்தியத்தை அறிந்த பொழுது அது நமக்குள் அளவுக்கடந்த அன்பையும், நன்றியையும் கொண்டு வந்திருக்கும். ஆனால் சற்று நிதானித்துப்

பாருங்கள்; அந்த அன்பும், நன்றியும் காலப்போக்கில் குறுகியிருக்கிறதா! இல்லை பெருகியிருக்கிறதா!

இது மாத்திரம் அல்ல, நாம் அவருக்கு சத்துருக்களாய் இருக்கும் போது இயேசு நமக்காக மரித்தார் என்று வேதம் சொல்லுகிறது. என் அன்பு வாலிபச் சகோதர, சகோதரிகளே! கிறிஸ்தவ வாழ்க்கை என்பது நன்றியின் மிகுதியால் நாம் உளமாற செய்யும் செயல்களாய் இருக்க வேண்டும். ஆம் வேதத்தில் இதற்கான பல உதாரணங்களை பார்க்க முடியும். மரியாள் பரிம ளத்தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றியப் போது, அதில் அவளுடைய அன்பு மாத்திரம் அல்ல, நன்றியுணர்வும் வெளிப்பட்டது.

2 கொரிந்தியர் 5ம் அதிகாரத்தில் பவுலடியார், **“எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்”** என்று சொல்கிறார். ஆகவே ஆண்டின் முடிவில் இருக்கும் நாம் சற்று தேவன் நம் வாழ்வில் செய்திருக்கும், செய்யும், செய்யப்போகும் அனைத்து நன்மைகளையும் சிந்தித்துப் பார்த்து நன்றி சொல்வோமா?

மாத்திரமல்ல, இந்த நன்றி நம்முடைய வாழ்க்கை முறையாக மாற வேண்டும். இந்த ஆண்டில் அவர் உங்களுக்கு செய்திருக்கும் அனைத்து நன்மைகளுக் காகவும் அவருக்கு நன்றி சொல்லுங்கள்.

“Christian Life is meant to be a REACTION to GOD’s ACTION of LOVE. That REACTION Coming out of an overflow of LOVE & GRATITUDE makes it so wonderful”

நன்றியின் சத்தம் உன் வாயில் எப்பொழுதும் தொனிக்கட்டும். நாதன் இயேசுவின் உள்ளம் அதைக் கேட்டு மகிழட்டும்! ●

தண்ணீர்!!

இன்றைய காலக்கட்டத்தில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பம்பரமாய் சுற்றிக் கொண்டிருக்கும் நம்மால் அத்தியாவசிய காரியங்களை செய்வதற்கும் மறந்து விடுகிறோம். ஒருசிலர் தினமும் 3 வேளை சாப்பிட வேண்டும் என்பதையே மறந்து விடுகிறோம். ஒரு நபர் தினமும் குறைந்தது 2 லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும் என்பது கட்டாயம். ஆனால் நம்மில் அநேகர் தினமும் 1/2 லிட்டர் தண்ணீர் கூட குடிப்பதில்லை என்பது தான் உண்மை பள்ளியில் குபடிக்கும் மாணவர்கள் தண்ணீர் குடித்தால் அடிக்கடி சிறுநீர் கழிக்க செல்ல வேண்டும் என்பதால் தண்ணீர் குடிக்காமல் இருப்பது முற்றிலும் தவறான பழக்கம்.

ஆகவே தான் திருச்சி கருங்குளம் அரசுப் பள்ளியில் மாணவர்களின் உடல் நலன் கருதி மணி அடிக்கும்போது எல்லா மாணவர்களும் கண்டிப்பாக தண்ணீர் குடிக்க வேண்டும் என்ற நல்ல திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். நாம் அந்த அரசுப்பள்ளி ஆசிரிய, ஆசிரியர்களையும், அப்பள்ளியையும் பாராட்டலாமே! நாமும் இதை பின்பற்றலாமே!!

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல்கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் சினெர்ஜியா கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

1ST SUNDAY (1ST DEC.)

VELLORE (3 PM)
Jesus Redeems, Ajantha Mahal, No.3, 6th West Cross Road, Gandhi Nagar,
9442885315 | 9786379556

JEBAMALAI (2 PM)
Kadaiyam (via), Keelamathapuram, (TirunelveliDist).
8300131000 | 9750955548

TIRUPUR (4PM - 6:30 PM)
Jesus Redeems Branch Office, No:62 2nd Floor, Benny Kumar Main Road, Tirupur -01. 9750955549

BENGALURU (4PM - 6PM)
Steve's Gym, HBR. Layout 3rd Block, (Near Jesus Calls). 9791444788

KULAMANICKAM (10:30AM-12 PM)
Jesus the Way AG Church, Adaikkalapuram,
9750955548 | 9442855315

TIRUPATI (3PM)
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

2ND SATURDAY (7TH DEC.)

MADURAI (4:30 - 6:30PM)
Thomas Tution centre Hall Opp. to Reliance Petrol Bulk, Pasumalai.
7598155502 | 9750955548

OOTY (2PM - 4:00PM)
YWCA Chapel, Anandagiri.
9750955549

2ND SUNDAY (8TH DEC.)

AMBUR (3PM - 6PM)
Concordia Hr.Sec.School, Opp Rly. Station,
9597927799 / 9442885315

SATHANKULAM (3.00 PM)
Carmel Stores 2nd Floor Opp Bus Stand,
9750955548 | 7094777781

THANJAVUR (3:00PM)
Jesus Redeems Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9750955548

SIVAKASI (3PM - 5:30 PM)
Jesus Redeems Gethsemane Prayer House, HOREB Complex, 1st Floor, No 1292B PKN Road (Rathna Vilas Stop). 9750955548 | 9442906567 | 7094777781.

USILAMPATTI (3:00PM)
Arputha Jeba Maiyam, Opp TELC School 7598155502.

MARTHANDAM (4.30 PM),
H.M.S.Century Hall, Behind C.S.I. Church, (opp. P.P.K. Hospital) 9865189883

MUMBAI (5PM - 7:30PM)
Bright High School, Village Road, Bhandup(W), Mumbai - 400078 (Near Nahur Rly. station), 9004882470 | 8082410410

PAVOORCHATRAM (2:30 PM)
KTC Nagar CSI Christ Church 9750955548, 9994436722, 9842166406

POLLACHI (3:30 PM - 6 PM)
Balamurugan A/C Mahal, Coimbatore Road, Near Amuthasurabi Hotel. 9750955549 | 9486037586

KOVILPATTI (2:30PM - 5.30PM)
St. Paul's Matriculation School, Kovilpatti. 9750955548 | 9787322334

VILLUPURAM (3 - 6PM)
SAP Mahal 1st Floor, Opp. Petrol Bunk, Old Bus Stand 8344411022 | 9442885315

3RD SUNDAY (15TH DEC.)

TIRUNELVELI (3:30 PM)
The Deaf & Dumb School, (opp- Central Jail) Palayamkottai. 9750955548 | 9488212915

COIMBATORE (4PM)
Jesus Redeems Branch Office Gethsamane Prayer Center, No:90,1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore 0422 - 2309040 | 9750955549

TRICHY (3PM)
22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur, Trichy - 620017. 9750955549

NALUMAVADI (2.30PM)
Tabernacle of God, Nalumavadi, Thoothukudi Dt. 9750955548 7094777781 | 04639 - 220022

NAGERCOIL (4 PM)
Jehova Salvation Church, 369C, Derik Junction. 9865189883 | 7598155503

CUDDALORE (3PM - 6PM)
Jesus Redeems Branch Office, 93, Nethaji Road, Near Manikoondu Opp. Manjakuppam 9965144000 | 9442885315

MUMBAI (5PM - 8PM)
Bethel, MithChowky Lane Near Girdhar Park, Marve Road, Malad -W. 9004882470 |9664050567

CHENNAI (3.30PM)
VGP Victory House, Mount Rd. 9840397736

DINDIGUL (3PM - 5:30 PM)
Jesus Redeems Gethsemane Prayer Center, No.37H/69, Scheme Road, Nagal Nagar. 7598155502|9750955548

4TH SUNDAY (4TH DEC.)

TUTICORIN (3PM - 5.30PM)
Suganthi Nursing Home Prayer Hall, Near Jesus Redeems Branch Office, 77 V.E Road, Opp to Holy Convent 9750955548 | 8344116000 7094777781

PONDICHERRY (3PM - 6PM)
Hallelujah A.G. Church, Thennan Salai Road, 8344433800 | 9787339422

THIRUVALLUR (2.30PM - 5 PM)
Jesus Redeems Branch Office HSR Tower (Near Gowdi Church) Theradi, Thiruvallur. 9442885315

MUMBAI (5PM - 7.30PM)
Dharavi 09004882470 | 8082410410

ERODE (4 PM - 6:30 PM)
Jesus Redeems Branch Office, No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode - 1. 9750955549

SURANDAI (2.30PM)
Jawarhalal Middle School,Surandai. 9443962141 | 9750955548 7094777781

TIRUVANNAMALAI (4PM- 6PM)
Leebanon Bungalow, Vettavalam Rd.,Bypass Road Corner 9865553420 | 9789004627

THENI (2.30PM - 5 PM)
Jesus Redeems Branch Office, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor, 7598155502 | 9976766422

PERNAMBUT (3 PM - 6 PM)
Revival Prayer Tower, V. Kotta Road, Pernambut, Vellore Dist. 99408 54125 | 9442885315

செய்திகள்

வேலையற்றோர் எண்ணிக்கை ஒரே மாதத்தில் 8.5% ஆக அதிகரிப்பு

புதுடெல்லி: நாடு கடந்த சில ஆண்டுகளாகவே பொருளாதார மந்த நிலையில் நீடிக்கிறது. இதனால், அனைத்து துறைகளிலும் வளர்ச்சி என்பது எதிர்பார்த்த அளவில் இல்லை. இதன் பாதிப்பு வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது. இந்தியாவில் வேலையில்லாதோர் எண்ணிக்கை கடந்த அக்டோபரில் 8.5 சதவீதம் அதிகரித்துள்ளது இது. கடந்த 2016ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருந்து பார்க்கையில் இதுவே அதிகம் என்று கூறப்படுகிறது. கடந்த செப்டம்பரில் வேலையில்லாதோர் எண்ணிக்கை 7.2 சதவீதமாக இருந்தது. அதுவே அடுத்த மாதத்தில் 8.5 சதவீதமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தியா பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையம் (சி.எம்.ஐ.இ.) வெள்ளியன்று வெளியிட்ட புள்ளிவிவரத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார மந்தநிலை காரணமாக வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு செப்டம்பரில் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாடு 5.2 சதவீதம் குறைந்துள்ளது. இது கடந்த ஓர் ஆண்டில் மிக மோசமான செயல்பாடு என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல், தொழில் துறை வளர்ச்சி என்பதும் தனது விரைவான வளர்ச்சி பாதையில் இருந்து மந்த நிலைக்கு திரும்பியுள்ளது. இது கடந்த ஆகஸ்டில் மிகவும் மந்த நிலையை எட்டியுள்ளது என்றும் புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக நிலவும் பொருளாதார மந்த நிலையை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனாலும், பா.ஜ. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் முந்தைய ஆட்சி காலத்தில் எடுக்கப்பட்ட பல்வேறு தவறான நடவடிக்கைகள் உயர் ரூபாய் நோட்டுகள் மதிப்பு இழப்பு, ஜி. எஸ்.டி. வரி விகிதம் அமல்படுத்திய விதம், தொழில் துறை, வேளாண்மை வளர்ச்சிக்கு போதிய கவனம் செலுத்தாத நிலை போன்றவை காரணமாக பொருளாதாரம் மந்த நிலைக்கு சென்று விட்டதாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

- இந்தியாவின் அடிப்படை கட்டமைப்பு வசதி கடந்த ஆண்டை விட செப்டம்பரில் 5.2% சரிந்துள்ளது. இது ஓர் ஆண்டில் மோசமான சரிவு என்று கூறப்படுகிறது.
- விரைவான வளர்ச்சியில் இருந்த தொழில் மேம்பாடு, 6 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கடந்த ஆகஸ்டில் குறைந்துவிட்டது.

தினகரன், நவம்பர் 2.

கடந்த 5 ஆண்டுகளில் 3,400 வங்கி கிளை மூடல்

புதுடெல்லி: கடந்த 5 ஆண்டுகளில் 3,400 வங்கி கிளைகள் மூடப்பட்டுள்ளன என ஆர்.டி.ஐ. மூலம் தெரிய வந்துள்ளது. வங்கி அதிகாரிகள், ஊழியர்கள் சங்கங்களின் எதிர்ப்பை மீறி பொதுத்துறை வங்கிகள் பல ஒன்றிணைக்கப்பட்டு வருகின்றன. வங்கி இணைப்பால் மூடப்பட்ட கிளைகள் தொடர்பான விவரங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் சமீபத்தில் கோரப்பட்டன.

இதற்கு ரிசர்வ் வங்கி அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: கடந்த 5 ஆண்டில் 26 பொதுத்துறை வங்கிகளுக்கு சொந்தமான 3,400 கிளைகள் மூடப்பட்டுள்ளன அல்லது பெரிய வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. 2017-18 நிதியாண்டில் 2,083 கிளைகள் மூடப்பட்டுள்ளன. இதற்கு முன்பு 2014-15ல் 90, 2015-16ல் 126, 2016-17ல் 253 கிளைகள் மூடப்பட்டுள்ளன. கடந்த 2018-19ல் 875 கிளைகள் மூடப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக 2,568 பாரத ஸ்டேட் வங்கி கிளைகள் மூடப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளது. ஏப்ரல் 1ம் தேதி முதல் பாரத ஸ்டேட் வங்கியுடன் அதன் துணை வங்கிகள் மற்றும் மகிளா வங்கிகள் இணைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன், 5 நவம்பர்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

கிறிஸ்துமஸ் கேக்...

தேவையானவை

1. மைதா மாவு – 300 கிராமம்
2. பேக்கிங் பவுடர் – 3 டீஸ்பூன்
3. சோடா உப்பு – ½ டீஸ்பூன்
4. வெண்ணெய் – 200 கிராம்
5. கேக் மசாலா – 1 டீஸ்பூன்
6. கோக்கோ – 1 டீஸ்பூன்
7. பால் – 100 மில்லி
8. செர்ரி – 50 கிராம்
9. முட்டை – 3
10. பொடித்த சர்க்கரை – 250 கிராம்
11. முந்திரிப்பருப்பு – 50 கிராம்
12. உலர்ந்த திராட்சை – 50 கிராம்
13. பிஸ்தா பருப்பு – 50 கிராம்
14 சுல்தானாஸ் – 50 கிராம்
15. வெண்ணிலா எஸ்சென்ஸ் – சில துளிகள்

செய்முறை

முதலில் சல்லடையில் மைதா மாவு பேக்கிங் பவுடர் சோடா உப்பு கேக் மசாலா இவைகளை ஒன்றாக கலந்து மூன்று முறை சலிக்கவும். பொடித்த சர்க்கரையுடன் வெண்ணெய் சேர்த்து நன்கு குழைக்கவும். முட்டைகளை உடைத்து ஊற்றி நுரைக்க அடிக்கவும். குழைத்த கலவையுடன் அடித்த முட்டை சேர்த்து நன்கு கலக்கவும். இதை மைதா மாவில் ஊற்றி விரல் நுனிகளால் எல்லாம் ஒன்று சேரும்படி கலக்கவும். இவற்றில் கோக்கோ, பால், காரமல், சர்க்கரை, எஸன்ஸ் சேர்த்து கலக்கவும். கடைசியாக மாவு தூவிய செர்ரி பழங்கள் உலர்ந்த திராட்சை சுல்தானாஸ் முந்திரிப்பருப்பு சேர்த்து பேக்கிங் ட்ரெயில் ஊற்றி ஒவனில் வைத்து பேக் செய்யவும். வெந்ததும் வெளியில் எடுத்து விரும்பியபடி ஐசிங் அலங்காரம் செய்யலாம்.

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2017-2019.
Date of Publication: 25-11-2019.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2017-2019.